[illegible]

V4 No. 49 10 Dec 1931

JL
[illegible]21, N28 KN
M31'4 49
188947

38

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

18 DEC 1931

Vol 4.] 1931 ஞு டிசம்பர் மீ 10உ [No. 49

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	961
2.	ஆண்டாள் - (முத்தியின் இலக்கணம்) E. N தணிகாசல முதலியார் B.A. B.L.	963
3.	சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை	964
4.	தமிழிரட்டையர் M. P. குமாரநாயகம்	966
5.	நவராத்திரி—(ஓர் நாடகம்) K. N. சுந்தரேசன் B.A. (Hons)	967
6.	கந்தபுராணமும் சங்கநூல்களும் பண்டிதர் R. திம்மப்பா ஐயர்	970
7.	கம்பராமாயணம் (திருவடி சூட்டு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	973
8.	களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B A. B.L.	976
9.	மதிப்புரை—சசிவன்ன போதம்	977
10.	வர்த்தமானம்.	979

அடுத்த ஆண்டுச் சந்தாத்தொகையை நமது சந்தாநண்பர்கள் இப்பொழுதே தயை செய்து மணியார்டரில் அனுப்பிவைப்பார்களாயின் அது எமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். இம்மாத இறுதிக்குள் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஜனவரிமாத முதலில் வி. பி. அனுப்புவோம். அதனைக் கண்டவுடன் பெற்றுக்கொண்டாலன்றித் திருப்பிவிடுவதால் எமக்கு அதிகமும் நஷ்டமாகின்றது. வி. பி. யில் அனுப்புவதைவிட, மணியார்டரில் செலுத்துவதே இருதிறத்தோர்க்கும் இலாபமாம். மலேயா நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லை யாதலால் அங்கிருக்கும் நண்பர்கள் இப்பொழுதே மணியார்டர் செய்தனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"மானேஜர்."

கலாநிலயம்.

18897

விதியே மதியோ!

சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருபோதுமில்லை—என்னுமிவ் வேதமே யனைய வாக்கை மாந்தர்மறக்கவேண்டுமென்று எற்றுக்குஇத்துணை முயல்கின்றார்களோ அறிகிலோம். விதியே மதியாய்விட்ட பாவம் இது என்று கைபற்று நிற்கவும் மனம் வரவில்லை. வட்டமும் சதுரமும் நீளமும்குள்ளமுமான மேசைகளைச் சுற்றிச்சுற்றி மொய்த்திருந்து நம்முடைய துன்பங்களைத் தீர்த்துக்கொள்ள முடுகுவதெல்லாம் முறைமையாய்த் தோன்றுகின்றதே யொழிய, கடவுளை நம்பினால் கதியுளது என்று சொன்னாலும் சிரிப்பிற்கே இலக்காய் முடிகின்ற கொடுமை ஒருவருக்கும் புலப்படக் காண்கிலம். நாராயணாய நமவென்று அவனடியிற் சேராரை வெந்துயரம் சேர்வது நிச்சயம், என்றார் பண்டைக்கவி ஒருவர். சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருபோதுமில்லை என்றார் மற்றொருவர். இவைபோன்ற அருமருந்தன்ன மந்திரங்களை நமக்கு உரைத்தளித்த பெரியோர் எத்தனைபோ பலர். அவைகளெல்லாம் பொருளுரைக ளல்லவாம்; முன்னேற்ற மடையாத முற்கால மாக்கள் மோனை எதுகைகளுக்காகக் கட்டிய பாட்டுக்களாம் அவை—(இவ்விடயம்பற்றி எம்மோடு பேசிக்கொண்டிருந்த ஒருவர், மோனை எதுகை என்ற சொற்களின் நேரான உருவமும் அறியாமல், 'மொகனெ எதுகெ' என்று குறித்தார். அப்படியே அவர் திணை துறைஎன்பனவற்றை, 'திணெ தொறெ' என்று பேசுவார். அவருடைய அறியாமையை இகழ்வதற்கன்று நாமிதைச் சொல்வது. அவருடைய தமிழ்க் கல்வி எவ்வளவு சிறியது என்பதைக் காட்டுவதற்கே இவைகூறப்பட்டன. ஆயினும், "மொகனெ எதுகெ" வைப்பதற்கன்றித் தமிழ்க்கவிகள் வேறொன்றிற்கும் பாட்டுக்கள் கட்டவில்லை என்று கூறும் துணிவோ மிகப்பெரியது. இத்தகைய துணிவுடையோர் இவர் ஒருவரோ யல்லர். இன்னவர் மொழிகளைப் பின்பற்றும் மாந்தரும் பலர்)—கடவுளை நம்பிநம்பித்தான்

நாம் இவ்வளவுதூரம் கெட்டுப்போனோமாம்; என்றென்று இன்னபடியெல்லாம், சொல்வோர் நாவும் கேட்போர் காதும் கைக்கப் பேசுகின்ற சொற்களின் திறம் யாவரும் அறிந்ததே

ஒன்றுமறியாமல் தமிழ்க் கவிகளையும் தமிழர் தழைத்தோங்குதற் காதாரமாயிருந்த முறைகளையும் இகழுமாறு இவ்வாறு எனின், மேனாட்டோர் முன்னேற்ற மடைந்து உலகத்தில் முன்னிடம் பெற்றிருக்கின்றனர் என்று புகழுமாறு மவ்வாறே அதனைப்பற்றிப் புகழ்கின்றவர்களும் ஒன்றும் அறிந்தவர் அல்லர். இன்னவர் படிக்கின்ற ஆங்கிலப் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் ஒருபாதி ஒருபோதும் எழுதியிருக்கத் தகாதன; மறுபாதி ஒருபோதும் படிக்கத் தகாதன. இவைகளுக்கிடையில் தங்கள் அறிவும் கல்வியும் சாலத் தேர்ந்துவிட்டதாய் எண்ணிக்கொள்ளும் எளிமைக்குத் தாம் இரையாவதுமன்றி மற்றவரையும் பலியாக்குவதே கருமமாய்த் திரிவதன் தீமை தான் சொல்லுந் தரமன்று. ஒன்றினை இகழ்வார், மற்றொன்றினைப்புகழ்வார், எனினும் எதனையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் எண்ணமோ எள்ளளவும் எய்தமாட்டார். "ஓங்கார நாதத்தின் திப்பிய ஒலியை உன்னுள்ளே கேட்கப்பயின்று உய்யக்கடவாய்" என்று உபதேசஞ் செய்தனர் நம்முன்னோர். அவ்வுபதேசம் பயனும்பொருளுமற்றதெனக்கழிந்துவிட்டது. அதற்குப் பதிலாக, ஐயாயிரம் மைல்களுக்கப்பால் பாட்டென்றபோரால் யாரோ ஒருத்தி கத்தின அபஸ்வரத்தை ரேடியோவில் அரைத்து அரைத்து அலறக் கேட்பது முன்னேற்றத்திற் கடையாளமாகிவிட்டது. அணுமுதல் அண்டங்களீறாக யாவற்றிலும் நடராசப் பெருமானது குஞ்சிதபாதங்கள் தாண்டவமாடக் கண்டு உய்யச்சொல்லினர் முன்னையோர். அஃதெல்லாம் அறியாதார் பிதற்றும் அவசமொழிகளாகிவிட அதற்குப் பதில், ஸினிமாக்களில் அற்பக் கூத்தாடும் நிழற்பூச்சிகளே நிச்சயமான முன்னேற்ற மெனலாயின. சிந்தையை யடக்கிச் சும்மாவிருக்கின்ற சுகத்தினை முன்னையோர் நினைப்பூட்டியதெல்லாம் விலக்கிவிட்டு, கையுங்காலும் சும்மாவிராத பதினேழு வயது மாது ஒருத்தி அமெரிக்காவிலிருந்து ஆப்பிரிக்காவிற்குப் பறந்துசென்ற ஆகாயக்கப்பலே முன்னேற்றத்தின் அதிசயமாகப் போற்றப்பெறுகின்றது. "வானவர் வாழ்க, வையகம் வழிவழி சிறக்க" என்று முன்னையோர் வைகலும் எழுப்பிய ஆவுதிப்புகைக்குப் பதிலாய் இப்பொழுது உலகத்தைச் சூழ்ந்தழிக்கும் எந்திரச்சாலைகளின் புகையே முன்னேற்றத்தின் பெருமையைக் கொளுத்திக் காட்டுகின்றதெனக் கொள்ளலாகின்றது. இப்படியே தலைகீழ்த்தோற்றமாய்த் திரும்பிப் போனவைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாய்த் தொடுத்துக்கொண்டே போவோமெனின் அத்தொடரிற்கு முடிவேயில்லையென்பதை எளிதில் உணரலாம். அருளும் அறிவும் ஆற்றலுமுடைய பெருந்தகை அரசனொருவன் தெய்வத் திருவருளை முன்னிட்டு நாட்டைக் காக்கின்றதென்னும் கருத்தெல்லாம் போய், அக்குணங்கள் ஒன்றுமில்லாக் கும்பல்கள் சயநலப்பேயைக் கும்பிட்டு நாட்டை ஆள்வதென்னும் கொள்கையே மற்றெல்லாத் தாழ்மைகளுக்கும் காரணமாயிருத்தலால் அதனை இக்காலக் கொடுமையின் மகுடம் என எளிதிற் கூறலாம். முன்னே அரசன், கடவுளின் அநுமதிபெற்று அக்கடவுளின் திருவுளத்திற்கிணங்க ஒழுகுகின்ற தூய்மைவாய்ந்தவனா யிருந்தனன். இப்பொழுதோ, பொய்க்கும் வஞ்சனைக்கும் பொறாமைக்கும் வைப்பிடமாகிய ஓட்டுப் பெட்டியினின்று அநுமதி பெற்று அதன் நரகமேயனைய இருட்டுவயிற்றிற் கேற்றபடி நடிப்பதே முன்னேற்றமடைந்த ஆட்சிமுறைக்கு அடையாளமாயிற்றே.

இப்படிப்பட்டவைகளால் இக்காலத்து மாந்தர் பெற்ற பேறுகள் யாவையோ? உடலிற்கும் பொருளிற்கும் உயிரிற்கும், மன அமைதிக்கும், ஆன்மாவிற்கும், அதன் உய்கதிக்கும் இடைவிடா அபாயங்களும் அவ்வபாயங்களுக்குப் பக்கத்துணையாகிய அல்லல்களுந் தவிர அம்மேனாடுகளில் கண்ட பயன் பிறிதொன்றுமில்லை யென்பதைத் தெளிந்தாற்றான் ஆகாதோ. இதற்கு ஆதாரமாக, புலமையிலும் நுண்ணறிவிலும் மெய்யுணர்விலும் முன்னணியில் வைக்கப்பெறும் பல ஆங்கிலேய வித்தகர்தம் கட்டுரைகள் பலவற்றை நாம் இதன்முன் பலவிடங்களில் இவ்விதழ்களில் எடுத்து வரைந்து வந்திருக்கின்றோம். அவ்வுண்மைகளை நம் நண்பர்கள் ஊன்றி நோக்குவாரெனின் உலகின் சரித்திரம் நல்வழி திரும்பும். திரும்பி, சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருபோதுமில்லை என்னும் மந்திரத்தின் நலங்களையெல்லாம் எய்தப்பெற்றதாகும். சிவாயநமவென்று சிந்தித்திருந்தாற்றான் இக்கதிக்கு வந்தோம் என்றுரைக்கும் படிற்றுரையாளர்கள், அந்தத் தூய சிந்தனையை ஒழித்த நாளிலிருந்துதான் இக்கதிக்கு விழத் தலைப்பட்டோம் என்பதை உணரப்பெறுவாராயின் இன்னமும் நாம் நற்கதி யடைதற்குரிய உரிமையை முற்றிலும் இழந்தவர்க ளாகமாட்டோம்.

இப்படியே நாம், மதியில்லார் பொய்ம்மாய வலைகளில் சிக்குண்டு எந்நாளும் சிதைந்தழிய வேண்டுமென்பது அருட்பெருங் கடவுளின் திருவுள்ளமாயிருந்த லியலுமென் றெண்ண மனங்கொள்ளோம். முன்னர் யாம் குறித்துளவாறு, தடுத்தாட்கொள்ளுந் தகைமையே இது என்று உன்னினும் உன்னலாம். மற்றிதனை மாந்தர் விதியே என்று கொள்ளினும் மதிமாழ்கி அயரவேண்டா. விதிக்கு விதியாகும் விற்றொழில் இலதேனும், காலனை உதைத்த காளகண்டன் தாள்கள் உள. அகலிகைக் கருள்செய்த திருமாலின் சீரிய பாதங்கள் உள. எச்சமயத்தோரும் இறைஞ்சும்படி ஏகமாய் நிற்கின்ற முழுமுதற் கடவுளின் விழுமிய திருவடிகள் உள. அவைதாம் இருப்பதால் மனஞ் சோரவேண்டா; அவைகளைத் தழுவினால் அபாயம் ஒருபோதும் இல்லை. அவைகளை விட்டுவிட்டு வட்டமேசைக் கால்களைக் கட்டிக்கொள்வதால் யாது பயன்? அக்கருங்காலிக் கால்களில் வாய்மையுமில்லை, தூய்மையுமில்லை, அழகுமில்லை. கலைபொலியுங் கண்களாலன்றி ஈரமில்லா மரக் காலின் மாயத்தைக் காணமாட்டார். கலைபொதிந்த மதியினாலன்றி அதன் மயக்கத்தினின்று தெளியமாட்டார். நம்முடைய இரு கைகளையும் குவியவைத்து அழைத்துப்போய்க் கடவுளின் மெய்யடிகளில் நம் சிரங்களை மூழ்குவிக்கும் கலைகளே, விதிக்கும் விதியாகவல்ல மதிக்குரிய கதியாகும். கலையுணர்வு பரவுதற்குக் கைதருவாரெல்லாம் உண்மைக் கடவுட் பணியாளராகின்றார். அன்னவர் திருத்[illegible] புரியும் தொண்டர்ப[illegible]

ஆண்டாள்

5. ஆண்டாள் முத்தி பெற்றதும் அதன் புராணவரலாறும்.

[956-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) ஆண்டாள் பெற்ற முத்தியின் இலக்கணம்

ஜீவன்முக்தராக விளங்குபவர் மற்றவர்கண்களுக்கு ஜடமான பஞ்சபூத யாக்கையைச் சுமந்து இருப்பவர் போல் தோன்றினும் அவர் உள்ளமானது பரிசுத்தமாயிருப்பதால், தேகமும் தெய்வீகமானதேகமாகவே உண்மையில் நிற்கும். சித்தத்தின் மலம் அற்றவுடனே நாம் சிவமானேம் என்பது திண்ணம் என்று மணிவாசகப் பெருமான் கூறுவதுகாண்க. தேகமும் சிவமாயின் அது அழிந்து பஞ்ச பூதங்களாய்ப்பிரிந்து உலகத்தில் சேஷமாய் நிற்கலாகாது. ஆதலால் தேகத்துடனே இத்தகைய பெரியார்கள் முத்திபெறுவது வழக்கமென்பது சைவ சமயத்தோரன்றி ஏனைய சமயத்தோருக்கும் சம்மதமாகும்.

இவ்வாறு ஜீவன்முக்தராய் ஆண்டாள் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் உலவிவந்தாரென்பதற்கு அவர் திருப்பதிகங்களினின்றே அகச்சான்றுகளைக் காட்டலாம்.

நடையொன் றில்லா வுலகத்து
நந்த கோபன் மகனென்னும்
கொடிய கடிய திருமாலால்
குளப்புக் கூறு கொளப்பட்டுப்
புடையும் பெயர கில்லேன்நான்
போட்கன் மிதித்த வடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்
போகா வுயிரென் னுடம்பையே.

13-ம் திருமொழி 6.

சித்தம் பரிசுத்தம் பெறுவதற்கு ஆரம்பித்த காலையிலேயே அசுத்த ஜடபதார்த்தமான யாக்கையும் பரிசுத்தமாக ஆரம்பிக்கும். இதைச் சிற்றில்சிதைப்பது என்னும் வழக்கில் பரமனை 2-ம் திருமொழியில் உருவகப்படுத்துவதைக் காண்க:—

பெய்யுமா முகில்போல் வண்ணா
உன்றன் பேச்சுஞ் செய்கையு மெங்களை
மைய லேற்றி மயக்க முன்முகம்
மாய மந்திர மென்கொலோ
நொய்யர் பிள்ளைக ளென்பதற் குன்னை
நோவ நாங்க ளுரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய் எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே.

2-வது திருமொழி 4.

இவ்வாறு அசுத்த சடதேகமானது, சத்தமாய்ச் சத்தாய் அறிவின் ஒளிவீசும் ஜீவன்முக்த நிலையில் தேகத்திலுள்ள ஒவ்வொரு தத்துவங்களும் அமுதசுரபியாய் அஞ்ஞான அசுத்த தத்துவங்களை முற்றும் மாற்றி ஒருங்குதிரண்டு விளங்கும். இவ்வாறு நேர்வது அச்சீவன்முத்தர் அறிவாரோ என்பதும் ஒருவகைச் சங்கை. அந்தரங்கத்தில் இன்பம் அனுபவித்துப் பரம்பொருளில் மயங்கும் சீவன், வெளிமுகம் நோக்கும்போது ஒவ்வொன்றும் அவனுருவாய்த்திகழ்வதைக் காணலாமென்னும் கருத்தை உருவகப்படுத்தியதுபோல் இவ்வம்மையார்,

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குற் புனமயிலே போதராய்!
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டிநீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்

திருப்பாவை 11.

சொரூபசமாதிநிலையில் சீவனுக்குக் காணப்பட்ட பரம்பொருளின் தேசோன்மயமாய திவ்யசக்தியானது கொன்னே நிற்பதில்லை. முமூட்சு நிலைக்கு வாராதிருப்பினும் அப்பெருமான் கிரணங்களானவை, அதிகமாய் முதிராத காயையும் கனியாக்கும் புகைபோல் அறிவைப் பழுக்கும்படிசெய்துவிடும். இதுதான் நூல்முறையில் கண்டறிந்த மரபுக்கு விரோதமாக நிற்பினும், அப்பெருமானுடைய கருணையென்னும் மத்தானது, பாற்கடலைக் கடைந்து அமுதமெடுப்பதுபோல் இத்தேகத்தினின்றும் பேரின்பவிளைவு காட்டும்:—

முற்றிலாத பிள்ளைகளோம் முலைபோந்திலா
தோமை நாடொறும்
சிற்றில் மேலிட்டுக் கொண்டுநீ
சிறிதுண்டு திண்ணென நாமது
கற்றிலோம் கடலை யடைத்து
அரக்கர் குலங்களை முற்றவும்
செற்றி லங்கையைப் பூசலாக்கிய
சேவகா வெம்மை வாதியேல்.

2-ம் திருமொழி 6.

பழகு நான்மறை யின்பொரு ளாய்மத
மொழுகு வாரண முய்ய வளித்தவெம்
மழக னாரணி யாய்ச்சியர் சிந்தையுள்
குழக னார்வரில் கூடிடு கூடலே.

4-வது திருமொழி 10.

இத்தகைய சீவன்முத்தராய் விளங்கிய ஆண்டாளின் திவ்ய தேகமானது உலகத்தில் உயிரைவிட்டு நீங்கிச் சேஷமாய் நிற்கக்கூடியதா, அல்லது அச்சீவான்மாவின் பாகமாகவே, பரமபதம் செல்லத்தக்கதோ என்று ஆராய்ந்து நோக்குங்கால், அவ்வம்மையார் தேகமுற்றும் மானிட யாக்கையாயிராமல் யாகத்தில் அவிப்பாகம் போல் பரமனிடம் செல்லத்தக்கதேயன்றி, மண்ணிலாகிலும் நெருப்பிலாகிலும் அழியத்தக்க பொருளாயில்லை. சீதாதேவியின் தேகம்போல் நெருப்பிலழியாத சுடராயும், உலகத்தைவிட்டுச் செல்லும்போது உடனுடனே செல்லத்தக்கதாயு மிருந்ததென்பது திண்ணம். ஆண்டாள் திருவாக்கும் இதற்கு அத்தாட்சியாகும்:—

வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பது மோப்பதும் செய்வதொப்ப

ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்
றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுபடின்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே.

1-வது திருமொழி 5.

“தேகத்தின் தத்துவம் அறியாது இம் மூடசனங்கள் என் தேகம் மனித தேகமென்று எண்ணுகிறார்களே”யென்றுவெளிப்படையாய்மொழியாமல், அதை மன்மதன் பேரில் ஆரோபித்து, “தத்துவமிலியென்று நெஞ்செரிந்து வாசகத்தழித்துக்” கூறி, “இம்மானிட நரிகள், என் தேவதேவனுக்கு இட்டுள்ள அவியான எனது தேகத்தை மோப்பதற்கு எண்ணுகிறார்களே” என்பார். “ஆதியிலே என் தேகம் ஊனால் உண்டான யாக்கையாயினும், அது பருவம் முதிர்ந்த காலத்தில் மண்ணுக்கும் நெருப்புக்கும் வேறு மற்று எதற்கும் என்னலாகாது. இவ்வூனிடையிலே, ஆழிசங்கு உத்தமர்க்கென்று உன்னித்து எழுந்தன என் தடமுலைகள், ஆகையால் மற்றைய மனிதவுருவம்போல் அது நான் வேண்டுமென்றாலும் மனித வாழ்க்கையிற் பொருந்த முடியாததாயிருக்கின்றது” என்று குறிப்பிடுவான் “வாழகில்லேன் கண்டாய்” என்பார்.

ஆகையால் ஆண்டாளைக் கண்டவர்களுக்குக் கண்ணில் தோன்றிய ஸ்தூல தேகமே, உண்மையில் சூக்கும தேகமாயும் காரணதேகமாயுமிருந்தமையால், திருவரங்கத்தில் இவ்வம்மையார் மூலஸ்தானத்தில் மறைந்தனரென்பது இயற்கைத் தத்துவத்திற்கு முரணன்று. இவருக்கு முன்னரும் பின்னரும் பலர் இத்தகைய தேகசித்தியை, ஆத்மசித்தியால் பெற்றனரென்பது பலவரலாறுகளாலறிகின்றோம். அவற்றைப்போலவே, இவ்வம்மையாரும் திருவரங்கத்தில் மறைந்தது கட்டுக்கதையன்று; முற்றும் உண்மையான விஷயமேயென்று நிரூபிக்கலாம். அது எவ்வாறெனின், நடலை வாழ்வான இந்த உலகசம்பந்தம் பிரணவத்தொனியாகிய தியானமென்னும் பஞ்சசன்னியத்தால் முற்றும் அற்றுப்போய், தெய்வவடிவாய்த் தேகமாகிய காலத்திலே, ஆண்டாள் இனி உலகத்திலுலாவுதலாகாதென்றெண்ணி, உருவகமொழியால் “கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் பேறு” வந்தது தனக்கென, தந்தை முதலானோருக்குத் தெரிவித்து, தனது உண்மைநிலையை யாவரும் அறியும்வண்ணம் திருவரங்கம் பெரியகோயிலில் மூலஸ்தானத்திற் சென்று ஸ்தூல தேகத்தைச் சூக்குமத்திலும், சூக்குமத்தைக் காரண சரீரத்திலும் அக்காரண உருவத்தைப் பரமன் சொரூபத்திலும் லயப்படுத்தி மறைந்தருளினர். இவ்வாறு பரமாத்துமாவில்ஐக்கியமானது அவர்மொழியிலேயே “வித்தக வேங்கட வாணனென்னும் * விளக்கினிற்” புக்கதோர் சோதியொக்கும்.

“ஆண்டாள்” முற்றிற்று

* அல்லிநாள் தாமரைமே லாரணங்கி னின்துணைவி
மல்லி நாடாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர்தல வேந்த னுகந்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

*—————————————— *

சிதம்பரதேவர் சரிதம்.

[947-வது பக்கத் தொடர்ச்சி]

22. ஞானோபதேசம்.

யோகீச்வரர், சிதம்பரசேகரப் பெருமாளென்னும் பாலவனச்சக்ரவர்த்தியும் புகழேந்தியென்னும்முதன் மந்திரியும் அன்புடன் பணிவிடை செய்யப்பெற்று ஆனந்த சித்தராய்ச் சிலநாட்சென்றபின் சிதம்பரனைத் தமக்கு மூகாம்பிகை செல்லவிடை தரவேண்டுமென்று வினவினர். அவர்களிருவரும் வணங்கி, ‘ஐயனே, யாங்கள் தங்கள்பிரிவாற்றோ’மென அவர், உங்களுக்கு இன்னும் மனோதிடம் வரவில்லை. நாமெங்கிருக்கினுமென்ன? உங்களுக்கும் எமக்கும் என்ன தொந்தம்? தேகத்திற்கும்தேகிக்குமேதேனும் தொந்தமுண்டோ? நீங்கள் வெற்றியடைந்து பட்டாபிஷேக சந்தோஷத்திலாழ்ந்திருப்பதால் உங்கள் மனம் உலக இன்பத்தை நாடி நிற்கின்றது. ஆகையால் எம்மைப் பிரிந்திருக்க வருந்துகிறீர்கள். ஆனாலிது எல்லாருக்கும் சகஜமே. இராஜாங்க விஷயங்களிலும் கலக்கமுண்டாம். இவைகளை விசாரணையால் ஒழித்துச் சத்கர்மங்களைப் பலத்தைக்கோராது செய்து இராஜதர்மத்தைச் சிறிதும்கைவிடாதுபிராணயாம சாதகம் செய்துவரின் மனோலயமும் ஆத்மஞானமும் அனுபவமாய்ப் பரமானந்த சுகத்தில் சுகத்திருப்பீர்கள்” என்றனர்.

சிதம்பரன்:—ஸ்வாமி, கர்மமென்றும் தர்மமென்றும் உரைத்தீர்களே, அவைகளை விவரிக்க வேண்டுகிறேன்.

யோகி:—கர்மம் என்பது மனம் வாக்கு காயமென்னும்மூன்று காரணங்களாலும் செய்யப்படுபவை. மனத்தின் தொடர்பில்லாமல் வாக்காலும் காயத்தாலும் மாத்திரம் ஓர் செய்கை விளையாதாகையால் மானஸ கர்மமே முக்கியமானது. நாம் செய்யும் ஒவ்வோர் வினைக்கும் அவ்வவ் வினையின் பலனுக்குங்கூடக் கர்மமெனலாம். மானிடமுயற்சியின் முடிவெல்லாம் அறிவே தவிரச் சுகமல்ல. சுகமும் ஜீவனது முன்னிலையில் சலிக்கும்போது அது ஜீவனில் பல தழும்புகளை உண்டுபண்ணுகின்றது. இத்தழும்புகளின் மொத்தத் தொகையே மானிட இயல்பாய் ஏற்படுகின்றது. இத்தழும்புகளை மெல்ல மெல்ல அறிவால் அகற்றுதலால் மனவொளி பிரகாசித்து ஞானமுதயமாம். திடசித்தமுடன் யாதொன்றைச் செய்யினும் வெற்றிபெறலாம். மனம்சலித்தால் நினைப்பு உதிக்கும். மனதின்கண் உதிக்கும் ஓர் நினைவு சமுத்திர அலைபோல் உலகத்தில் பரவிச் செல்லுங்கால் தன்னைப்போன்ற மற்றொரு நினைவையணுகி அதனுடன் கலந்து விருத்தியடைகின்றது. இப்படிக் கலப்பதற்கு அந்நினைவானது எவ்வளவு தூரமேனும் போகலாம்; எவ்வளவு காலமேனும் ஆகலாம். ஒருவனிலிருந்து புறப்பட்ட நினைவு கெட்டதாயின் கெட்ட நினைவுடையோனையும் நல்லதாயின் நல்ல நினைவுடையோனையும் அணுகி அவன் கெட்ட எண்ணத்தை அல்லது நல்ல எண்ணத்தைத் தடிப்பேறச் செய்கின்றது. இப்படியே ஒருவர்க்கொருவர் தாங்களறியாமலே தங்கள் தங்கள் நினைவுகளைத் தடிப்பேறச் செய்துகொள்ளுகிறார்கள். ஆகையால் நன்மையை விரும்புவதால் நல்ல நினைவு உதித்து நன்மையும், தீயவற்றால்

தீமையும் உலகில்விளைகின்றது. ஓர் நினைவு உதித்தால் அதன் பலத்தை எப்படியாவது எக்காலத்திலாவது அனுபவித்தே தீரவேண்டும். பலனைக்கோராத நினைவாயிருப்பின் மனதில் தழும்பேற்படாது. அதைப்போன்றநினைவைத் தேடிச்சென்று கலந்து உலகத்திற்கு நன்மையே விளைவிக்கும். தர்மமாவது கடவுளுக்குப் பிரியமானவைகளைச் செய்து பிரியமல்லாதவைகளைச் செய்யாதிருப்பதே. எல்லாவஸ்துக்களிலும் எல்லாப் பிராணிகளிலும் எல்லாவிடங்களிலும் கடவுளிருக்கிறார். என்றும் யாதொன்றற்கேனும் துன்பம் விளைவிக்காமல் நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதே தர்மமென்றறிவாய். தீச்செய்கைகளால் துன்பமேற்படின் அத்துன்பத்தை அனுபவிக்கவேண்டியது தக்கதேஎன்றெண்ணி அத்துன்பத்தை நீக்கக் கடவுள் உதவிபுரியார். கடவுளுக்குப் பிரீதியுண்டாம் என்றுணர்ந்து பயபக்தியுடன் நடந்துவரவேண்டும். இவ்விஷயங்களில் கவனம் வைத்து நீ எப்போதும் உன் இராஜாங்க நடவடிக்கைகளை நடத்திவருவாயாக.

சிதம்பரன்—ஸ்வாமி! ஜீவனென்றும் ஆத்மாவென்றும் இரண்டுஉளவோ? உளவேல் சுகதுக்க கர்மபலன்கள் ஜீவனையா ஆத்மாவையா அணுகுகின்றன?

யோகி:— ஆத்மா புத்தி மனது பிராணன் காமம் லிங்கம்என்றபடி ஸ்தூலசரீரம் ஏழுபிரிவுகளாயுளது. முதல்மூன்றும் அழிவதில்லை. இவைகள்சேர்ந்த நிலைமைக்கே ஜீவனெனப்படுவது. மற்றையநான்கும் அழிந்து போகுபவை. மனம் எல்லா வினைகட்கு மிருப்பிடமாகையால் சுகதுக்கங்களும் கர்மபலன்களும் மனங்கலந்த ஆத்மாவாகிய ஜீவனுக்கேயன்றிச் சுயமான ஆத்மாவுக்கில்லை. புத்திதான் ஆத்மாவொளிபெற்று மனோசாக்ஷியாய் நின்று மனத்திற்கு அறிவு ஊட்டுகின்றது. நினைப்பென்னும் மலினம் மனத்தினிடமிருக்கும்வரையில் ஜீவனுக்குப் பிறப்புமிறப்புமிருக்கின்றன. மனதின் மலினத்தை முற்றும் அகற்றிப் புத்தியின் உதவியால் ஆத்மாவைத் தனிமைப்படுத்தித் தரிசிப்பதே யோகமுடிவும், ஞானஉணர்ச்சியடைவதற்கே பிராணயாமக்கிரமமும் உனக்கு அறிவித்ததென்றுணர்வாய்.

சிதம்பரன் : — அங்ஙனமாயின் ஞானவுணர்ச்சி அனுபவமாம்படி கிருபைசெய்ய வேண்டுகிறேன்.

யோகி :—இது வாக்கால் சொல்லியறிவிப்பதல்லவென்றுகூறிச்சிதம்பரனை ஒருபரிசுத்த அறைக்கழைத்துச் சென்று பத்மாசனத்திலமரச்செய்து சின்முத்திரை உபதேசித்து மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அனாகத விசுத்தி ஆக்ஞாவென்னும் ஆறு ஆதாரங்களைத்தெரிவித்துக் குண்டலனி சக்தியைக்கிளப்பிப் படிப்படியாய் ஏற்றிப் பிரம்மரந்திரமணுகி அமிர்தபானம் செய்விக்கச் சகலமுந்தானாய்த் தான் சகலமுமாய் உணர்ந்து பிரகாசித்து மகிழ்வுற்றிருக்கும் சிதம்பரனைப் பார்த்து ஆனந்தமுற்று “இனிமேல் நீ இம்மகிழ்ச்சி புணர்ச்சியைக் கைசோரவிடாமல் பிர்ம்மவித்தாய் ஜனக மன்னனைப்போல் சகலபோகங்களையும் அனுபவித்து அவையொன்றிலும் பற்றின்றி வாழ்வாயாக. புத்திரோற்பத்திக்காக மணம்புரிந்து இல்லறத்தை வழுவாதுநடத்திவருக” என்றுரைத்துவிடைபெற்றுக் குலசேகரப் பெருமானை அழைப்பித்து, “நீர் உமது குமாரனுக்கு விவாகம் நடத்திப் பிறகு துறவுபூண்டு கதியடையும் மார்க்கத்தை நாடுவீராக” என்று புகன்று தமதிருப்பிடம் சென்றார்.

23. முக்தி.

குலசேகரப் பெருமாள் யோகீஸ்வரர் ஆக்கினைப்படி புதல்வனுக்கு விவாஹம் முடிக்கச் சிந்தைகொண்டவராய் விக்ரமசேனனுக்குத் தெரிவிக்க, அவன் சந்தோஷித்தனாய் இராஜகுமாரனது மனோபாவமறியப் புகழேந்தியை யழைப்பித்து அரசனது உத்திரவையுரைத்து “நீ இராஜகுமாரனது மனோபாவ மறிந்தவனாதலால் உன்னை விசாரிப்போமென்று இராஜனுக்கு மறுமொழி கூறுது இங்கு வந்தேன்” எனப் புகழேந்தி மகிழ்ந்து, “தந்தையே எல்லாமுணர்ந்த தேவரீருக்கோ நான் யோசனை கூறுவது! என்னை வினவினதால் கூறுகிறேன்” சிதம்பரதேவர் விவாஹத்தை விரும்பினவரேயன்றி இப்போதே சன்யாசித்வம் பெற்றிருக்க உறுதிகொண்டவரல்லர். யோகீஸ்வரர் கட்டளையிட்டபடி புத்திரோற்பத்திக்கல்லது விஷய சுகத்தைக் கோரி விவாஹஞ் செய்துகொள்பவருமல்லர். ஆகையால் சர்வ லக்ஷணங்களுமமைந்த பதிவிரதாசிரோன்மணியான ஓர் கன்னிகாரத்தினத்தைத் தேடி மணஞ்செய்துவைக்கவேண்டும்” என்றான். தன் புதல்வனைப் புகழ்ந்து சர்வ லக்ஷணங்களுமமைந்த ஓர் கன்னிகையைத் தேட அனேக இராஜ்யங்கட்குத் தூதனுப்பியுமகப்படாமல் மஹாதேவருதவியால் நிடதேசத்தரசன் பிரதாபசந்திரன் தவத்தால் பெற்ற பரிமளகந்தி என்னும் பதிவிரதையை சர்வ ஆடம்பரவைபவங்களுடன்சுபமுகூர்த்தத்தில் அரசகுழாங்கள்மகிழ விவாகம் முடித்துப் புகழேந்திக்கு அரசனுத்திரவுப்படி பிரதாபசந்திரன் மந்திரியின் குமாரத்தியை வதுவை செய்து யாவரும் களிப்புற்றிருந்தனர்.

சிதம்பரதேவரும் புகழேந்தியும் யோகீஸ்வரர் உபதேசித்தவிதம் தினமும் விடாமுயற்சியுடன் நிஷ்டை யனுஷ்டித்து இராஜ்ஜிய பரிபாலனத்திற் கொஞ்சமேனும் தவறுவாராது நடந்துவந்தனர்.

குலசேகரப்பெருமாள் இறவிவர்மனைச் சிறைமீட்டுச் சில வெகுமதிகளுடன் அவன் ராஜதானிக்கனுப்பிச் சிலநாள் ஆனந்தமுடன் வாழ்ந்து தன் பத்தினிகளுடனும் விக்ரமசேனனுடனும் மூகாம்பிகை சென்று யோகீஸ்வரர் கிருபையால் நிஷ்டைபுரிந்து முக்தியடைந்தனன். இராஜபத்னிகளும் விக்ரமசேனனும் அம்மனாலயத்திற் பணிவிடைசெய்து பரமபதமடைந்தனர்.

குருவருளாலும் தேவகிருபையாலும் நற்குண நற்செய்கைகளமைந்து பகவத்பக்தி யேற்கனவே வாய்க்கப்பெற்ற ஓர் செல்வனை ஈன்று பருவகாலத்தில் ஓர் உத்தம கன்னியை மணஞ்செய்வித்து இராஜ்யத்தையளித்து ஏகாந்தத்தை விரும்பிப் புகழேந்தியும் விஜயசேகரனுந்தொடர்ந்துவர மூகாம்பிகை சென்று சிதம்பர சேகரப்பெருமாள் சமாதி யனுஷ்டித்துக் குருவருளால் விதேஹ முக்தியடைந்தார். புகழேந்தி பணிவிடை விரத மனுஷ்டித்துச் சிதம்பரன் தேஹம் நீங்கத் தன்தேஹத்தையும் விட்டு மோக்ஷமடைந்தான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சிதம்பரதேவர் சரிதம் முற்றும்.

தமிழிரட்டையர்

[947-வது பக்கத் தொடர்ச்சி]

அந்நாளில், கண்ணன் திருவேங்கிடத்தான் என்ற துணைவர் இருந்தனர். அவர்களில் முன்னோன் கல்வியறிவின்றி மூர்க்கனுப் விளங்கினமையின் பின்னவன வனோடு ஒத்துவாழ இயலாமல் ஓரேமனைக்கண் வேறு வைகினன். தம்பியினது கல்வியின் திட்பமும், பிறர் பாலுள்ள வாஞ்சையும் மற்ற நல்லொழுக்கங்களும் இரட்டையர் காதுகளில் பட அவர்கள் அவனைக்காணும் அவா மிக்கவராய் அவனில்லிற்கேகினர். போயவரை அண்ணனெள்ளிக் கொடுஞ்சொற்களால் அதட்டிப் பேசுதலும் "மோப்பக் குழையு மனிச்ச, முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்று தமிழ்மறை விளம்பிஇருக்கின்றவாறு மனங்கன்றியவராய் அவ்வாயிலைவிட்டு நீங்கிக்கொண்டிருக்கையில், இதை எவ்வாறோ கேள்வியுற்ற திருவேங்கடத்தான் குறுக்கிட்டுப் பல இனிய மொழிகளால் தன்னில்லில் உணவருந்திப் போதல்வேண்டுமென மன்றாடினன். சீரொழுகு சான்றோர் சினம் நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமியல்பினதாதலாலும் போன்பா லழைத்திடலை மறுத்திடல் யாவருக்கும் எளிதல்லாதாதலாலும் அவர் உடன்படுதலும், அவன் இயன்றன அவர்க்குச் செய்தலும் நிகழலாயின. புலவரில் மூத்தோன் இனித்த சொற்களையுடைய திருவேங்கிடத்தான் முன் வேம்பினும் கைத்த மொழியாளனுன கண்ணன் பிறந்தமை எவ்வாறு பொருந்துமென வினவாய் அரைப்பாட்டிசைக்கப் பின்னோன் திருமகள் பின்தோன்றவிருக்கு மாழியிலேயே பெரியம்மையாரும் முன்றோன்றியதை நிகர்க்குமெனக்கூறி அச்செய்யுளை நிரப்பினன். வழக்கம் போல் ஒரு காசும் விடையும் பெற்றுக்கொண்டு திருவேங்கடத்தானையும் பிரிந்தகன்றனர்.

சென்றவர் திருவருணையிலுள்ள ஒரு சமணச் செல்வனிடம் போய் நின்றார்கள். அவன் இவர்களுடைய கோலத்தைக்கண்டு எள்ளியவனுய் 'நீவிர் யாவர்' எனக் கடாவுதலும், தாம் தமிழ்ப்புலவர் என இரட்டையர் விடையிறுத்தலும் நிகழ்ந்தன.

சொன்னவரைப் பார்த்து முன்பினின்ன
  சொற்களியை தரப்பா தொடுமினென்று
ன்னவர்தா முடன்மன்னு மருணைநகர்
  வாழ்சம்பந் தாண்டா னுக்கீண்
டென்னவிதத் தினுக்காகத் தலைச்சவரம்
  பண்ணுகின்ற தென்று மின்னார்
வன்னவலைக் காந்தளங் கைகொடு குட்டாமலுக்
  கென்றும் வருத்திட் டாரே. (புலவர்புராணம்)

தான்வேண்டியதினின்றும் மேம்பாடுடைத்தாயசமுத்தி என்னும் கவியை மிக்க நயத்தோடு புகன்றிடக் கேட்டும் அச்சமணன் தங்களை மதியாமையோடு தாமுரைத்தவற்றை உணருமாற்ற லில்லாதவனுயு மிருத்தலைக்கண்ட இரட்டையர், "நன்றேதரினு நடுவிகந்தாமாக்கத்தை, யன்றே யொழியவிடல்" என்ற வாயுரை வாழ்த்தை நினைவுகூர்ந்து காசுபெறுதலையும் விரும்பாது அப்புறம் விரைந்தகன்றார்கள்.

நாமக ளருள்பெற்ற சித்துக ளியற்றிவரு மிரட்டையர் தில்லைக்கலம்பகம், திருக்கச்சிக்கலம்பகம் திருக்கச்சியுலா முதலிய செய்யுட் டொகுதிகளுடன் பல புண்ணிய இடங்களின் புராணங்களையும் திருவாய் மலர்ந்தருளிப் பேரின்பம் பயக்கவல்ல நிட்டையில் முயல்வாராயினர். சின்னுட்களில், கங்கையும் பிறையும் பாம்பும் கடுக்கையும் முடிமேல்வைத்த அங்கணர், அன்னர் கனவில் எழுந்தருளி ஆமத்தூர்க் கேகுமாறு ஆணைதந்து மறைந்தருளினர். அவர்கள், தாங்கள் பொழிந்துள்ள எல்லா நூல்களினும் நயம்மிக்கதாய்த் திருவாமத்தூர்க் கலம்பகமென்ற பாத்தொகுதியைப் பாடிக்கொண்டு அவ்வூரையடைய வேந்தன் முதலிய பல்லோரும் எதிர்கொண்டேத்த அபிராமேசர் ஆலயம் அடைந்தனர். ஆண்டு அந்நூலை யரங்கேற்றத் துவக்கிப் பம்பாநதியின்மேலக்கரையில் கோயில்என்றவளவில் மன்னன்முதல் மங்கையர்வரை அது பொய்யென்றனர். திகழ்+சக்கரம்=திகடசக்கரம் எனப் புணர்ந்தமைக்குத் திருவருளை வீரசோழியத்தைக் கொணர்ந்து அவையோர்களை ஒப்பச்செய்யும் வரையில் காத்திருந்த கச்சியப்ப சிவாசாரியர் நிலையை அவ்விரட்டையரும் எய்தி வாளாவிருந்தனர். பிரமேசர் திருவருளால் அன்றிரவு பெருமழை பெய்து, முன்னர், கோயிலின் மேற்புறமாய்ச் சென்றுகொண்டிருந்த பம்பாநதியின் படுகை மணலினுல் மேவிப்போகவும் கோயிலின் கீழ்ப்புறமாய் அந்த ஆறு பெருக்கெடுத்து வரவும் நிகழ, அரையன்முதல் பல்லோரும் அவ்விருவர் தாள்களில் பன்முறை தாழ்ந்து, தங்கள் கூற்றே தங்கட்குக் கூற்றுனமையை நாணத்தோடு ஒப்பி, நூலை நுவலுமாறிரக்க அவர்களு மிசைந்து இனிதின் முடித்தனர். வேந்தனுதியர் வேண்டுவன செய்வதாய் விளம்ப அச்சிரியர்கள், "நாங்கள் வருமுன்னர்ச் சிவபெருமானுல் அறிவிக்கப்பட்டிருந்தும் நதி பிறழுமாறு கவி புகன்றமையாலன்றோ எம்மை எள்ளாது துதிக்கின்றனை, இன்றேல் நிந்திப்பவருடனன்றோ சேர்ந்திருப்பாய். எமக்கு வேண்டுவனவற்றையீயச் சிவபெருமானுளன். பெரிய அந்தணர்களையும், முனிவர்களையும், பாவலர்களையுமேயன்றி யிரவலர்களையும் போற்றுவாயாக" என்ற அறிவுரைகள் விளம்பி அவனது பாதுகாவலில் சின்னுள் வைகி ஒரு வைகல் நேரில் தோன்றிய சோதியில் இரண்டறக்கலந்து இறப்பும் பிறப்பும் நீங்கப்பெற்றார்கள்.

இன்றமந்த நதியவ்வா றெழுகுதலும்
  பெருவெள்ள மெய்து மாயின்
முன்றலங்கு வழியினும்போய் மாதைநகர்
  சூழ்தாலும் முறையிற் காண்முன்
குன்றறமு மாணவங்கொண் டிகலுமிளம்
  புலவீர்காள் கோடி கோடி
யென்றபஞ்சாக் காஞ்செபித்தா யினுமரன்பா
  லருள்பெறவே யேற்ற மாமே.

இத்தகைய கவிக்குரிய ரின்னுரென்
  றொருபாட லிசைத்தா னோரோ
கைத்தலில்சீர்க் கலம்பகத்துக் கிரட்டையர்கள்
  எனத்துணிந்து சமறினன்
மெய்யெத்தனை மாதரிய மொடுசாதுரியம்
  மிவைதாப்பாட் டிசைத்திட் டாது
முத்தப்பே ருயாருட்செ யவிலையே
  இலகமுழு தொப்பா தன்றே.

— [புலவர் புராணம்]

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[952-வது பக்கத் தொடர்ச்சி]

குஞ்சு :—ஏன் முத்தமிடமாட்டேன் என்கிறாய்!

சுப :-இதோ, முத்துமேல் முத்தம் (முத்தங்களிட்டு) நீயும் இடு எனக்கு!

குஞ்சு .—நீ பதினைந்திட்டாய், நான் ஐம்பத்தொன்றிடுகின்றேன்—வா (முத்தங்க ளிடுகையில்)

தியா-குரல் :-செத்தான், செத்தான், பாவம்! (பிணத்தை ஈர்த்துக்கொண்டு வருகிறான்)

மாயா :—(தோன்றி) செல்லுங்கள்—என் பணம்-பையிலிருந்தால் எடுத்துக் கொள்கிறேன்--பதினொன்று ரூபாய்!

தியா :—சீசி! பகைஞன் சவமேனும் மரியாதை வேண்டாமா.

மாயா :—பணத்தையும் பொசுக்குவானேன்—எனக்கு அவன் கடனடைக்கணும். கேட்டேன், பிசகா?

துரை :-(மெள்ள நொண்டிநொண்டி வந்து) என்னைக் கவனிப்பாரில்லையா ? (தாழ்வாரத்தில் உட்கார)

தியா :—காயம் எங்கே, காட்டு.

[காமாக்ஷி மூன்று விளக்குகளுடன் வருகிறாள்]

காமா :—விலையுயர் வண்டி! தானேயோடி! நாசமாயிற்றே!

துரை :—காயமில்லை-உடலைத்தான் ஒரு குலுக்கு குலுக்கிற்று—எலும்புகள் ஆட்டமெடுத்துக் கட்டுக் குலைந்தனபோல் நோகின்றன.........

ராஜீயா-குரல்:—வாங்கள் இங்கேஎல்லோரும்—அற்புதம்!

மாயா :—அது அங்கே குஞ்சுவா ?—செத்தாளா ? ஐயையோ!

தியா :—எப்படி, இப்பொழுது சென்று மாட்டிக் கொண்டாளா? குஞ்சு! பேசு!

சுப :—பதில் சொல்லு! (சிரிக்கிறாள்).

குஞ்சு :—இதோ, அம்மாக்கு முத்தமிட்டுக்கொண்டிருக்கிறேன்—இருபத்தேழுதான் ஆயிற்று.

ராஜீ-குஞ்சு :—பின் யாரிங்கே ?

காமா :—(தன் விளக்கையும்காட்டி) சக்கரத்தடியில் யார்! சிறு குழந்தை!

தியா:—(இடப்புறத்தில் மறைந்து) உயிரில்லை, அசைவில்லை!

சுப:-வேறு யாரும் வரக் காரணமில்லையே (நெருங்கி

தியா-குரல்:—ஹா ஹா! தந்தச்சிலை—இந்தியதேவி சிலை! வடிவு தெரிகிறதா தெளிவாய் உங்களுக்கு (தூக்கிக்கொணர்கிறான்).

சுப :—ஆம், தெரிகிறது—இந்திய தேவியே! நம் நாட்டு இறைவி.

மாயா :—யாரு? குஞ்சு முகமே அது! உன்னிடம் ஒரு குஞ்சு, உன்னிடம் ஒரு குஞ்சு—இரு குஞ்சுகள்.

ராஜீ :—யார்—நம்நாட்டுத் தாயா ?

சுப :—ஆம்! நம் நாட்டன்னை

குஞ்சு:—என்னைப்போன்று தோன்றுகிறாள்? நிலைக் கண்ணாடியிலன்றோ இதுபோல் பார்த்திருக்கிறேன்.

காமா :— ஆச்சரியம்! மோட்டாரதனுல்தான் உடைந்தது.

தியா:—இந்திய தேவிமீது ஓட்டியிருக்கிறான் சிறிதும் ஈரஇரக்கமின்றி! ஆனுல் இறப்பிலி அவள்......

சுப :—நான் நிறுத்தடா என்று எச்சரித்தேன்—துச்சன் கேட்காமல் தன் தீக்கருத்தை முற்றுவிக்க எண்ணி முயன்றான்—தடுத்தாள் இறைவியே!

தியா :—தீக்கருத்தா—என்ன ?

சுப :—பாட்டியும் நிறுத்தென்றாள்—நின்றிலன்—குஞ்சு தூங்குகிறாள் என்று பொய்சொல்லி மூட்டை எதனையோ தூக்கி வந்திருக்கிறான்.

தியா :—ஆம், அதோ—மூட்டை ஒன்றிருக்கிறது—வழவழென கையில் பட்டது—புடவை மூட்டை போலும்.

காமா :—சாமியாரே, வந்து பார்த்திரா இதை !

துரை :—எதை—எனக்கு மயக்கம் வருகின்றது, என்ன ?

காமா:-ஒரு விக்கிரகம் !

துரை :—புதைய லெடுத்தீர்களா ?

காமா :—மோட்டாரை உடைக்க.................

தியா:-உடைக்கத்தானே மண்ணினின் றெழுந்தது.

துரை :—ஆகா—அப்படியா—பார்க்கணும் (தள்ளாடிக்கொண்டு வருகையில்) தூணில் மோதிற்றென் றல்லவோ இருந்தேன் !

தியா :—ஐந்தடி தூரம், பத்தடி தூரம்கூடக் கடக்கவில்லை வண்டி. இந்தச் சிலை தாக்கிட இவ்வளவு தவிடுபொடியாய்ப் போகும் என்று நான் நினைக்கவேயில்லை—காற்றுச் சூறைபோல், நாற்பது ஐம்பதுமைல் விசையில் துலங்கி யிருக்கவேண்டும் அவன்—அத்துணை அவசரம் என்ன அவனுக்கு ?

சுப :—எனக்காக- (சிரிக்கிறாள்)

தியா :—எங்கே ?

காமா :—கோவிலுக்கு-

துரை :—கோவிலுக்கல்ல—இதென்ன விக்கிரகம்?

காமா :—பின் எங்கே ?

ராஜீ :—பேர், இந்திய தேவி.

துரை :—இந்திர தேவியா ?

தியா :— நம் நாட்டணங்கு! இந்திய தேசத்து இறைவி!

துரை :—தேசத்திற்கென ஒரு தெய்வமுண்டா ?—நான் கேட்டதில்லையே !

தியா :—கண்டாயல்லவா! நம் நாடும் ஒருதெய்வம், அறிவாய்

துரை :—இறந்தே போயினுள உருமபிள்ளை ?

தியா.:—ஆம் சாமியாரே ! மாயாண்டி, என்ன பண்ணுகிறா யங்கே ?

மாயா :—மார்பைத் தொட்டுப் பார்க்கிறான்—மூச்சிருக்கோ என்று ! (சிரிக்கிறான்)

ராஜீ :-மூக்கில் தெரியாதோ-மூச்சு? பணமிருக்கோ பார்த்தாயோ—எத்தனையிருக்கு—அது தானே உன் மூச்சு !

மாயா :-நன்கு துருவட்டுமா, எல்லாப் பைகளிலும்,

காமா :—சாமியாரே — என்ன செய்வது ?

சுப :—முத்தமிட்டு முடிந்ததாம்மா !

குஞ்சு :—இன்னும் முப்பதிருக்கு !

சுப :—என்ன—கணக்கு நீள்கிறது—

ராஜீ :—நம் பேச்சு அவளைக் கலைப்பதால் எண்ணிக்கை தவறுகிறதாம்.

துரை :—ஏன் என்னுல் இப்பெண்ணை வசப்படுத்த இயலவில்லை என்று இப்பொழுது தெளிந்தேன். பெருஞ் சக்திவாய்ந்த அம்மன் ஒருத்தி !

தியா :—ஆம்—33 கோடி மக்கள் சக்தியும் சேர்ந்து கூடிக் கூர்ந்த அமர சக்தியன்றோ, நாட்டம்மன் !

துரை :—அத்தகையானை நாம் எதிர்க்கமுடியுமா, வெல்ல இயலுமா—கொல்ல ஒல்லுமா ?

குஞ்சு :—ஏண்டியம்மா—உருமபிள்ளை சாகணும், பின்னரே வரணும் வீட்டிற்கு என்று காத்திருந்தாயா வாயிற் கதவருகே ?

சுப :—அவன் சாகணும் என்று நான் வேண்டும் பொல்லாதவளல்ல. என்னையும் உன்னையும் அல்லலாட்டி அலைப்பதால் வீட்டைவிட்டுத் தொலையானு அவன் என்று கடவுளை இறைஞ்சினதுண்டு.

மாயா :—வல்லவன், வன்மையான்—யந்திர அற்புதம் பற்பல அறிந்தோன்—யந்திரத்தாலேயே இறந்தான் ஏழை!

காமா :—உலகில் அவனை நிகர்ப்பவர் யார்? எனக்கு என்னென்ன ஒத்தாசைஉதவி,உயிரென உலவினனே! அவனைக்கொண்டு பெரும் கோட்டைகள் வானளாவத் தூக்கியிருந்தேன். மனதில் கட்டி முதலில்! இரும்பையும் பிசின் ரப்பரையும் எண்ணெயும் கொண்டு மாயமும் மாதும் மலிவித்த தீரன், குழகன், ஈரத்தரையில் புரண்டுஇக்குக்கிடக்கிறன்.(அழுகிறள்—தேம்புகிறள்)

தியா :—நான் இகழ்பாட வரவில்லை—எனினும் ...உம் வீட்டுப் பட்டுச்சேலைகள் எங்கிருக்கின்றன தெரியுமா பாட்டி! (மறைகிறன் இடப்புறம்)

காமா :—ஏன், மேஜைமே லடுக்கியிருக்கிறேன்—திருட்டுப் போயினவோ?

சுப :—அதோ, அங்குள.

காமா :—எங்கே?

தியா :—(மூட்டையைக் கொணர்ந்து) பார்த்தீர்களா, கள்வன் காரியத்தை !

சுப:—குஞ்சு தூங்குகிற முட்டை என்று கொணர்ந்தான் போலும் !

துரை :—எத்தனை நாள் அந்த நீலாடையையே கட்ட முடியும்; பிறவும் வேண்டாமோ ?—அவனது முன்யோசனை !

சுப :—நான் நினைத்த வண்ணமே. கடவுளே—மானம் காத்தார்.

தியா :—துணிப்பித்தன் —உயிரினும் பெரிது துணி, அவனுக்கு. ஆணுடை எரிந்தன,பெண்ணுடை திரட்டத் துவக்கினன் போலும்.

காமா :—திருடன் அவன் என நான் ஒவ்வேன். கோவிலிலே நீலச்சேலைக்குக் குஞ்சுமசியாவிடின் இவை கொண்டு வென்றிடக்கருதிய முன் நோக்கனே அவன் —இறந்தவனைத் தூற்றவேண்டாம் இங்கே. (தேம்புகிறள்)

துரை:-ஏனம்மா-அழுவதில்பயனென்ன,பொறுமை கொள்க.

காமா:—ஓகோ—செத்தோரை உயிர்ப்பிக்கமுடியும் என்றனிரல்லவோ-சாமியாரே-உம் யோகவன்மையைக் காட்டுங்கள்...அவன் பிழையாவிடின் நானும் உயிர் தாங்கேன்—எழுப்பவேண்டும் அவனை! (காலில் விழுகிறள்)

ராஜீ :—பெரிய யோகியோ நீவிர் !

குஞ்சு :—தாடிக்காரர் யோகீசுவரரே ?

சுப :—பழுப்பிலைகளுக்கு உயிரளித்துப் பூச்சி படைத்தீரல்லவா ?

காமா :—மூச்சு முழுதும் கூட அகன்றிருக்காது —உயிருட்டுக—இந்தக் கட்டழகு மாரனை நீக்கோ, மண்ணுக்கோ பலியிடுவதா? (பிணத்தைக் குலுக்கி ஆட்டுகிறள்) உருமபிள்ளை நான்தான் — உன் காமு, எழு!

துரை :—அம்மணி-ஆகாத காரியமெனத்தோன்றுகிறது.—

காமா :—"தோன்றுகிறது" தானே— முயன்று நீர் முனைக !

துரை :—புழு பூச்சி படைப்பது எளிதா ?

காமா :—அது அரிதாயின் இது எளிதுதானே—சரி—என்னென்ன வேணும்? ரத்தம் ஒரு துளியும் சிந்தவில்லை—கஷ்டமென்ன ?

ராஜீ :—இதோ, சிந்தியிருக்கிறதே சாமியார் மேல்!

குஞ்சு :—தாடி எல்லாம் நனைந்திருக்கிறது கறுப்பாய் ?

மாயா :—காயம் பட்டிருக்கோ ?

தியா :—வெந்நீர் கொண்டுவா—துடைப்போம்.

காமா :—மருந்தும் கொணர்கிறேன்.

சுப :—நோகிறதா மோவாயில் ?

துரை:—ஆம்—என் தாடியை அவிழ்த்துவிடுங்கள்.

காமா:— அவிழ்த்து விடுவதா—சிரைத்து விடுவதா?

துரை :—இதோ—வந்துவிடும் !

குஞ்சு:—(தாடியைஇழுத்து) இதோ, வந்துவிட்டது!

தியா } (கூடி) நான் சொன்ன தென்ன ?
சுப } (கூடி) வேடிக்கை ! வேடிக்கை !
மாயா } (கூடி) விபூதி வாங்கிக்கொண்டேனே பாவி!

காமா :—இரவுவேளை ! கனவோ, நனவோ—விழித்துக்கொள்கிறேன் (தன்னைக் கிள்ளிக்கொள்கிறள்)

குஞ்சு :—உனக்கு வலிக்குமா ? எனக்குத்தான் வலிக்கும் !

காமா :—நனவே—கனவல்ல! (கண்ணைத் துடைத்துக்கொள்கிறள்)

ராஜீ :—தாடியைக் கொடு இங்கே!

குஞ்சு :—நான் கட்டிக்கொள்ளப் போகிறேன்.

ராஜீ :—துலுக்கர்தான் தாடி வளர்ப்பர்—கொடு என்னிடம் !

சுப :—பெண்கள் கூடவோ ?

ராஜீ :—என் தம்பிக்கு !

காமா :— (தாடியைப் பிடுங்கி, மடியில் ஒளித்துக் கொண்டு) விளையாட்டா உங்களுக்கு ?

ராஜீ :—பாட்டி—உங்களுக்குத் தூக்கம்—கண்ணைத் துடைத்து விழிப்பானேன்—போங்கள் படுக்கைக்கு. இந்திய தேவி சிலையை அனைவரும் தரிசிக்க நான் போய் ஊராரை அழைத்துவரப் போகிறேன்.

துரை :—பிரமித்து நிற்கிறீர்களே !

காமா :—தாடிமட்டும் பொய் — மற்றவெல்லாம் மெய்தானே.

தியா:—மெய்யே, மெய்யை முன் சார்ந்திருந்ததால், முகத்தில் வளர்வதால் ? (சிரிக்கிறன்)

துரை :—என் கதையைச் சொல்லுகிறேன், பொறுமையாகக் கேளுங்கள்.

காமா :-உன் கதை யாருக்கு வேணும். நீ கொடுத்த மூலிகை பொய்தானு ? விடம் தானு—என் சாவைத் தடுக்காதா ?

சுப :—சாவை முடுக்கிக் கொணருமோ ?

துரை :—பொய்தான்—எனின், விடமுமல்ல—வெருள வேண்டா.

காமா:-ஐயோ, பாவி. விஷமருத்திக் கொன்றனை என்னை. கிறுகிறுக்கிறது என் தலைப் பந்து (மூர்ச்சையாய் உருமபிள்ளைமீது கீழேசாய்கிறள்)

துரை:—(விரைந்தோடி விழாமல் அவளைப் பிடித்துக் கொண்டு) சாவு வராமல் நிற்குமோ-இன்றே, என்றோ

தியா :—கண் இடுங்கிவிட்டது (தாங்கப் போகிறன்)

துரை:—விடு சாயட்டும், இறப்பிலேனும் அவளைத் தழுவி அணையட்டும்.

சுப :—அதோ, பாட்டியைப் பாரங்கே, பாவம் !

குஞ்:—அம்மாவுக்குப் பிறகுதான் பாட்டி, உன்னைத்தான் பார்த்துக்கொண்டிருப்பேன்.

மாயா :—பாட்டிக்கன்றோ தாய் பிறப்பள்.

ராஜீ :—பிறவிதான் முக்கியமோ ?

சுப :—பின் எது ?

குஞ்:—அன்பே ! அன்பே !! (முத்தமிடுகிறள்)

சுப :—அன்பே, பின் என்னை நீ அன்னை என்றழைக்கும் பேறு வருமா எனக்கு ?

துரை :— (குலுக்கி) இறந்தனள் இவளும்—என்ன ஆசைகாட்டி ஆட்டினேன்—பாவம். நான் பொய்யன் என்று அறிந்த மனம் பொறுக்குமா ? மனம் உடைந்தே ஓய்ந்தாள்.

தியா :—(மூச்சின்மையும், நாடி துடிப்பின்மையும் கண்டு) என்ன ஆசை, இவளைக் கொன்றதிவ்வாறு ?

துரை :—மீண்டும் குமரியாக்குவதாக மூலிகை யென எதையோ ஒன்று மருந்தளித்தேன் இன்று.

குஞ் } (கூடி) அப்போ எனக்கு எனக்கு என்று
மாயா } (கூடி) சண்டை போட்டோமே—அதா ?
ராஜீ }

சுப :—நல்ல வேடம்!

தியா :—பேராசை, நன்று நன்று !

துரை:—அவன் அங்குச் செத்தான்—கணவன் இறந்ததும் காதலி தீக்குதிப்பதுபோல் இவளும் உடன்இறந்தாள்—

தியா:- இந்தியதேவியின் திருவுளம்அப்படியாயிற்று (நிறுத்தி வைத்திருக்கும் சிலையைப் பணிய)

துரை:—ஆம். திருவுளம் அங்ஙன் சென்றது. (பணிகிறன்)

சுப:—நாமும் வணங்குவோம் (சுபத்திரை, மாயாண்டி குஞ்சு கும்பிடுகின்றனர்)

தியா:—ராஜீயா—நீயோ? கைகூப்பக்கூடாதாக்கும்; சலாமாகிலும் போடு.

ராஜீ:—சலாம் போட மாட்டேன் (போய்க் கட்டி அணைகிறள் சிலையை)

தியா:—அம்ம! அழகே! இஃதே அன்பு!—எம்மினும் நீ செய்ததே மேல் (ராஜீயாவைத் தழுவிக் கொண்டு) போய், தந்தையிடம் சொல். இனி என் வேலை. எதிரிக்கு ஒரு சீட்டும் விழாது—முழுமுதல் வெற்றி என்று முரசு முழக்கச்சொல் இன்றே!

சுப:—சுயராஜ்யக்கட்சியில் சேர்ந்துவிட்டாரா ?

தியா:-எங்கே, அந்தக் கடிதம்—ஆம், இப்பொழுது தான் கொணர்ந்தாள்-எங்கே அது-பையில் வைத்தேனே? உறுதியுரைச்சீட்டுஅது, முக்கியம் (தேடிக் காணுமல்) போகட்டும்-அவரது சொல்லை நம்புவோம். சொற்பிறழா மானம்காக்கும் காரியமும் கவலையும் அவரது. அக்கடிதத்தை முதலில் யாதென நினைத்தேன் தெரியுமா ? (சிரிக்கிறன்)

மாயா :—நான் அழைத்ததால் ஏன் என்கிறீர்—அங்கே வரமாட்டீரோ—வேடிக்கை காட்டுகிறேன்.

துரை:—உனக்கு வேடிக்கை இப்போ—ஏண்டா ?

சுப :—என்ன என்று நினைத்தீர்கள்--உருமபிள்ளை உருத்துச் சொல்ல, உம்மைப் போலிசார் கைதுசெய்ய வந்த கடிதம் என்றா ?

தியா :—(நகையொடு) ராஜீயாவோ என்னைக் கைது செய்ய வருவள்—ஆனல் விலங்குகள் எதிர்பார்த்தவனே ?

ராஜீ :—நான் சொல்லட்டுமா ?

தியா :—சொல்லாதே ! சொல்லாதே.

குஞ் :—நான் சொல்லட்டுமா ?

சுப :—எனக்குத் தெரியவில்லை.

ராஜீ :—தூதி பதிலும் கொணர வேண்டாமோ ?

தியா :—உன்னைத் தண்டிக்கணும்—வா இங்கே !

ராஜீ :—முதலே இடம் சேரவில்லை — பதில் எங்ஙனம் ?

தியா :—இரண்டு குற்றங்கள்—தண்டனை—...

ராஜீ :—நானென்னசெய்வது—சாமியார்தடுத்தார்.

துரை :—எதனைத் தடுத்தேன் ?

ராஜீ :—சுபத்திரைக்குக் கொணர்ந்த கடிதத்தை !

சுப :—கிடைத்ததே என் கைக்கு—கண்ணுக்கும் !

தியா :—ராஜீயா, பொய்யள் நீ !

ராஜீ :—அதனை, அந்தப் புத்தகத்திலன்றோ செருகி வந்தேன்.

சுப :—அன்பளிப்பென வந்த விலை ஒப்பு உயர்வில்லா அந்நூலைப் பத்திரமாய்எடுத்துவைக்கப்போனேன். கீழே விழுந்தது கடிதம்—பார்த்தேன்.

ராஜீ :—சாமியாரை ஏமாற்றிவிட்டோம். அவர் நம்மை ஏமாற்றியதுபோல் (குதிகுதிக்கிறள்).பழிக்குப் பழி !

சுப :—சாமியார் சொன்ன குறிப்பும் தூண்டிற்று.

தியா :—பழிக்குக் குழைவும் இழிவும்—என்பதே காந்திவேதம். அறிவிலி நான் எதிர்பார்த்திருந்தேன் பங்களா வெளியில்! கதராலயமும் போகவில்லை, சக்தி ஆசிரமத்திற்கும் ஏகவில்லை. ஈர்க்கும் சக்திகள் இரண்டு இங்கே.

சுப :—என்ன இரண்டு ? (குஞ்சுவை முத்தமிட)

தியா :—குஞ்சுவும்...

ராஜீ :—நானும்...

சுப :—நான்தான் பதில் விடுத்தேனே.

தியா :—எங்கே அது—நான் பார்க்கவில்லையே—எங்கே ராஜீயா அக் கடிதம் ?

துரை :—கடிதம் வரைந்தோனே நேரிலிருக்கக் கடிதம் காணுமல்போயின் என்ன ?

தியா-:ஏது சாமியாரே, மெய்ச்சாமியாரே போலும் நீங்கள்—காதல் கவற்றுத் தூயரேயோ ?

துரை :—பொய்ச்சாமியாரே நான் என்று ஒப்புக் கொண்டேனே மெய்யை !

தியா :—பின் ஏன் உணர்ந்திலீர் அன்பின் திறம் ! நேர்நே ரியம்பொணுக் கருத்துக்களைக் கடிதப்படத்தின் பின்மறைந்து துணிவுடன் கழறுவர் காதலர் !

சுப:-குளிர்கிறதா குஞ்சு—வா, உள்ளே போவோம்.

குஞ் :—இந்த அம்மாவும் வரணும்!

தியா :—நானும் ஒரு அம்மாவா உனக்கு, சரி கடிதம் எங்கே ?

குஞ்:—இதோ, மார்பிலிங்கே ஒளித்து வைத்திருக்கிறள்.

சுப :—எடுக்காதே குஞ்சு—எனக்கு வந்தது அது.

ராஜீ :—தா இங்கே—சோதிப்போம்.

தியா :—பதிற்கடிதம் தானே இதயத்தருகே ஒளித்து...

சுப :—இதயத் தொளித்ததை வெளியிழுத்துவிட்டேனே. தந்திக்காரியின் தவறு, பதில் பெறுமுன் ஓடிவிட்டாள். பதில் தந்திக்குக் காகிதமும் எழுதுகோலும் உடன் அனுப்பியும்...

தியா :—போய்ப்பார், ராஜீயா, தேசீய கீதநூலை எங்கு எறிந்தாயோ—அங்கோ, அருகோ இருக்கும்; கொண்டுவா அதனை...சீக்கிரம் !

சுப:—வெளியிலே ஒற்றுடிப் பதுங்கி யிருந்தீரோ?

துரை :—எங்கள் மேல்தானே ஐயமும் ஒற்றும் ?

ராஜீ:—அடே! நீ கூறும் குறமும் குறியும் பிசகுவதில்லையே (தாழ்வாரமேறி, புத்தக அறைக் கதவருகே கிடக்கும் நூலைக் கொணருகையில்)

தியா:—என்ன பதில்? பகரலாகாதா?

சுப:—சாமியாருக்கு நீங்கள் இப்போது சாற்றிய பதிலே, எனது...

தியா:—அது சரி—அணிபெறயாத்த கவித்தமிழ் நீ அதில் எழுதியவாறு பொழிப்புரைக்கவேண்டாம். கருத்துரையும் உள்ளுறையும் போதும், மொழிக.

சுப:—நான் பாட்டுப்பாடவில்லை. நாடகமே நடித்தேன்.

தியா:—ஒன்றும் எழுதவில்லையா?

சுப:—இல்லை—இங்குத்தா, ராஜீயா, புத்தகத்தை.

ராஜீ:—இதோ, கடிதமிருக்கிறதே.

சுப:—யார் எழுதினதோ? (சிரிக்கிறாள்) நான் பதில் பகர்ந்தது நடையாலும் நடிப்பாலும்.

தியா:—எப்படி? (கடிதத்தை வாங்கிக்கொண்டு)

சுப:—இதோ, என்னைப் பாருங்கள்—என் ஆடையையும் ஆடம்பரத்தையும்.

தியா:—ஏழை நீ, எப்பொழுது செல்வியானாய்?

சுப:—இந்தக்கடிதம் வந்ததும்—மாயாண்டி போய் அந்த வேடிக்கையைச் சாமியாருடன் பாரேன்—

மாயா:—இதுவும் வேடிக்கையாயிருக்கிங்கே.

ராஜீ:—அந்தக் கடிதத்துடன் எத்தனை ரூபாய்க்குச் செக்கனுப்பியிருந்தாய். உடனே ஓடி, பட்டுகள், வைரங்கள் வாங்கி அணிந்து வந்திருக்கிறாள்?

குஞ்:—எங்கம்மாவுடையது — பண்ணட்களாயிருக்கே, அவட்கு—நான் பிறப்பதற்கு முந்தி—நீ பிறப்பதற்கு முந்தி—எல்லோரும் பிறக்கும் முந்தி.

தியா:—அவைகள்தான் ஆதிமூலமோ?

குஞ்:—நான்தான் ஆதிமூலம், குஞ்சுவும் நானே!-ராஜீயா எங்குப்போகிறாய்—மாயாண்டியுடன்?நானும் (மூவரும் கொலுப்பக்கம் ஏக)

தியா:—எனக்குக் கோபம்தான்—பொன்னியின் துணிமணிகளைக் கூசாமல் நீ அணிவதா?

சுப:—நான் மாட்டேன் என்றேனே இல்லையோ, கேளுங்கள் சாமியாரை.

துரை:—முதலில்—பின்னரோ? பேராசை மேலீட்டால் ஒவ்வினாள்—உளமிலதேல் உடலில் இவை ஏறுமோ, தங்குமோ?—தாங்குமோ?

சுப:—எப்போ? உமது கடிதம் பெற்றதும். இவை அனைத்தும்—மயிற்சேலை, நகைநட்டுக்கள் நண்டுகள் பொன்னியதோ? உமதல்லவோ? அவளுக்காகச் சீர்வரிசையெனப் பரிசளித்துக் கறந்ததே—உமதே என்றெண்ணி அணிந்து களிக்க எண்ணினேன்—உமது சொத்தைப் பழகித் துலக்க அனுமதிச்சீட்டு வந்ததே, "என்னதெல்லாம் உனதே! என்று மேற்கோள் ஓதட்டுமா .இதோ—பத்திரமிருக்கிறது பத்திரமாய் (மார்பிலிருந்து கடிதம் எடுக்கப் போகிறாள்.)

தியா:—நீ நவிலும் அமைதி ஒருவாறு பொருந்தும்-எனினும் நான்பரிசளித்தபின் எனதல்லவே அது.

சுப:-"குஞ்சுவின்நலமும் நாம் நாடவேண்டாமா?'

துரை:—கொஞ்சிற்று என்று கூறு. குஞ்சுவின் நன்மைக்கெனவே இதனை நாங்கள் வற்புறுத்தினோம்.—ஏமாந்துவிட்டாள்?

—⊸*=*⊷—

கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[949-வது பக்கத் தொடர்ச்சி]

இனி, இக்கோட்டை மதிலின் றன்மையைக்குறித்த குறட்பாவையும், அதன் விரிவுரையின் விவரத்தையும், மேலோர் குறித்தவாறே வரையத்தொடங்குவாம்.

'உயர்வகலம் திண்மை யருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்'

ஏன்பது குறள்.

[(ஏணியின் உதவியைக்கொண்டு ஏறிக் கடக்க முடியாத) உயர்ச்சியும் (வெளியிலுள்ளவர்க்கு வெட்டித் தோண்டிவிட்டு உள்ளே வரமுடியாத) கீழிடப் பருமையும்,(உள்ளே யுள்ளவர்கள் மேல்நின்று போர்த்தொழில் செய்தற்கேற்ற) மேலிடப் பரப்பு முதலாக உள்ள அகலமும், (கருங்கற்களாலும் செங்கற்களாலும் செய்யப்பட்டுப் பிறராற் குத்தப்படற் கியலாத) உறுதியும், யந்திரங்களை யுடைமையாற் பகைவர் நெருங்க முடியாத) அருமையும், என்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை அரண் என்று நூலோர் சிறப்பித்துச் சொல்லுவர்.]

என்பது, பரிமேலழகரது உரையைத் தழுவிய தெளிவான உரை.

இந்தக் குறளின் குறிப்புரையில் பரிமேலழகனார் 'அருமை-பொறிகளான் அணுகற்கருமை' — பொறிகளாவன.

'வளைவிற் பொறியு மயிற்செறி நிலையுங்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியுங்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும்'
சிலப்பதிகாரம் - அடைக்கலக்காதை.

என்றிவை முதலாயின' எனச் சிலப்பதிகாரத்திலிருந்து பொறிகளின் விசேடச் செய்திகளை யெல்லாம் அறிந்துகோடற்குரிய மேற்கோளைக் காட்டியிருக்கின்றனர். இனி இவ்வடிகளுக்கு உரையாசிரியர் திலகமாகிய அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரையாசிரியரும் எழுதியிருக்கின்ற சிறந்த உரையைத்தழுவி யாவரும் உணரும்பொருட்டுத் தெளிவான ஒருரை தருகின்றாம். அவ்வுரை வருமாறு:—

(வளைந்து தானே அம்புகளை எய்யும் எந்திரவில்லும், கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லையுமிழும் கல்லெறி கயிறும், காய்ந்து இறைத்தலால் சேர்ந்தாரை வருத்துவதாய நெய்யும், செம்புருக்கும், உருகக் காய்ச்சி யெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும் (இருப்புவட்டுகள் காய்கிற உலையென்பர் அரும்பத உரையாசிரியர்) வந்தோர்மேல் கல்லைவீசும் இடங்கணி யென்னும் பெயர்பெற்ற யந்திரத்துக்குக் கல்லிட்டுவைக்குங் கூடையும் தூண்டில் வடிவாகப் பண்ணிப் போகட்டுவைத்து அகழி நீங்கி மதில்பற்றுவாரைக் கோத்து வலிக்குங் கருவியும், கழிகோல்போலக் கழுத்திற்பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், ஆண்மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப் பறவை வடிவமாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் யந்திரவரிசையும், அகழியிலேறினால் மறியத் தள்ளும் இருப்புக்கவையும் கழுக்கோலும், அம்புக்கட்டும் (மண்ணிற்புதைத்த இருப்பாணி என்பர் அரும்பத உரைகாரர்) மறைந்து நின்று அம்பு தொடுத்தற்குரிய ஏவறைகளும், (பற்றுக்கை—அம்பு கட்டுங்கயிறு), மதில்தலையைப் பற்றுவாரைக்கையைப் பொத்தும் ஊசிப்பொறிகளும், பகைவர்மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலி யென்னும் புள்வடிவான பொறியும், மதில்தலையி லேறினாருடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பாற் செய்து வைத்த பன்றிப்பொறியும், மூங்கில் வடிவாகப் பண்ணி அடித்தற் கமைந்த பொறியும் (பணைமுரசென்பாருமுளர் குதிரைப்பந்தியுமாம் என்பது அரும்பதவுரை), கதவுக்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்திலே வீழ விடும்மரங்களும், நிறைந்த வலிமைகொண்ட குறுக்கேபோடுங் கணையமரமும், ஒருவகை யீட்டியும், சிறுசவளமும்(ஒருவகை யீட்டி), எறியீட்டியும், நூற்றுவரைக் கொல்லி (சதக்கினி), தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி, என்பனவும்' என்பதே.

மயில்செறிநிலை யென்பது மயில்வடிவமான யந்திரம் எனப் பொருள்படும். அயில் எனக்கொண்டுரைத்தலுமுண்டு. இங்ஙனமுரைத்த அடியார்க்கு நல்லாரே சீவகசிந்தாமணிக்க ணுள்ள இக் கருத்துக்கொண்ட பாக்களை யுதாரணமாகக் காட்டியுள்ளாராகலான், கீழே அக்கவிகளைத் தெளிவான உரையுடன் ஈண்டெடுத் தெழுதுவாம்.

மாற்றவர் மறப்படை மலைந்து மதில்பற்றி
னூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியுந்
தோற்றமுறு பேய்களிறு துற்றுபெரும் பாம்புங்
கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா.

விற்பொறிகள் வெய்யவிடு குதிரைதொட ரயில்வாள்
கற்பொறிகள் பாவையன மாடமடு செந்தீக்
கொற்புனைசெய் கொள்ளிபெருங் கொக்கெழில் செய்
கற்றலைக டிருக்கும்வலி நெருக்குமர நிலையே. [கூகை

செப்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும்
வெம்புருகு வட்டுமிழ்வ வெந்நெய்முகந் துமிழ்வ
அம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித்
தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே.

கரும்பொனியல் பன்றிகத நாகம்விடு சகடம்
குரங்குபொரு தகரினொடு கூர்ந்தரிவ நூன்னூல்
பரந்தபசும் பொற்கொடிகள் பதாகையொடு கொழிக்குந்
திருந்துமதில் தெவ்வர்தலை பனிப்பத் திருந்தின்றே.

சீவகசிந்தாமணி-நாமகளிலம்பகம்-செய்யுள்,
(72-75.)

என்பவை, பொறிகளின் விவரமடங்கிய செய்யுட்களாம். இனி, இவற்றினுரை வருமாறு—

(பரந்த பசுமையாகிய பொன்மயமான கொடிகள் பெருங்கொடிகளுடன் கொழிக்குந் தொழில் திருந்திய மதிலானது, பகைவாது வீரப்படை மாறுபட்டு அகழைக்கடந்து தன்னைப்பற்றின் அப்பகைவர் தலை நடுங்கும்படி, நூறுபேரை யொருகாற் கொல்வதொரு பொறியும், பகைவரைக் கீழே தள்ளியடிக்கும் பொறியும், கட்புலனாகிய பேயும் யானைப்பொறியும், (அகப்பட்டவரை விழுங்குந் தன்மையையுடைய) பெரும் பாம்புகளும், யமனைப்போன்ற கழுகுப் பொறிகளும், தானே சென்று கட்டுஞ் சங்கிலியும், விட்டேறு என்னும் ஒருவகைப்படையும், பகைவருயிரைக் கொள்ளுந் தன்மையையுடைய புலியாதிய விலங்குப் பொறிகளும், விற்பொறிகளும், கொடியபகைவர்மீதே விடுதற்குரிய குதிரைப் பொறிகளும் தானேதொடர்ந்து கொல்லுங் கூரியவாளும், இடங்கணி முதலிய கற்பொறிகளும், பாவையும், அன்னமும், மாடமும் அடப்படுஞ் சிவந்ததீயும், கொற்சாதியரால் செய்யப்பட்ட [illegible]ய்தலைக்கொண்ட எரியிரும்புப் படையும், பெருங் கொக்குப்பொறிகளும், அழகற்ற கோட்டான்களும், பகைவரது தலைகளைத் திருகிக்கொள்கின்ற வலியுடனே நெருக்குகின்ற மாவகைப்பொறிகளும், (ஐயவித்துலாம்), எவ்விடத்துந் திரிந்து செம்புருகின வெம்மையான குழம்பையுமிழ்வனவும், பகைவர் வேதற்குக் காரணமான எஃகுருண்டைகளை யுமிழ்வனவும், சூடாகிய நெய்யை மொண்டுமிழ்வனவும் அம்புகளைச்சொரிவனவும், வேற்படைகளைச் சொரிவனவும், கற்களைக் கொழிப்பனவுமாகத் தமதறிவைக் கொண்டு யவனதேசத்துத் தச்சர் தத்தம் முயற்சிநுட்பத்தாலுண்டாக்கின பொறிகளும், இரும்பினால் செய்யப்பட்ட பன்றிப்பொறி முதலாகச் சினங்கொண்ட விடவராக்கள், செல்லுந் தகைமை வாய்ந்த வண்டிப் பொறிகள், குரங்குப் பொறிகள், மோதுந் தன்மை வாய்ந்த ஆட்டுப்பொறிகள், கூர்ந்து அரிவனவாகிய நுண்ணிய நூற்பொறிகளீறாக உள்ளவையுந் திருத்தமாக அமைப்பெற்றுளது என்பது, (உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் சங்கப்புலவர் சரபமாகிய வே. சாமிநாத ஐயர் முதலானவர்கள துரைக்குறிப்புக்களைத் தழுவிய பொழிப்புரை).

சைவச் சீலராகிய பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்தில் திருநகரப்படலத்தின்கண், இக்கருத்துக்களனைத்தையுந் தழுவிக் கூறியுள்ளாராகலின் சந்தர்ப்பத்துக்கேற்ப அக்கவிகளையு மீண்டுக் குறிக்கின்றாம்:—அவை,

மழுக்கள் வீசுவன நஞ்சுபூசுமுனை
வாள்கள் வீசுவன முத்தலைக்
கழுக்கள் வீசுவன குந்தநேமியெரி
கால வீசுவன காலனேர்
எழுக்கள் வீசுவன கப்பணங்கள்விட
மென்ன வீசுவன வன்னெடுங்
கொழுக்கள் வீசுவன கற்கலண்கயிறு
கோத்து வீசுவன வார்த்தரோ.

நஞ்சுபல்குதுளை வாளெயிற்றரவு
நாகிமிர்த் தெறியு மலையரா
வெஞ்சினங் கொள்முழை வாய்திறந்து
பொருவாரை விக்கிட விழுங்குமால்
குஞ்சரங் கொடிய முசலம்வீசியெதிர்
குறுகுவார் தலைகள் சிதறுமால்
அஞ்சுவெம்பொறி விசைப்பினுங்கடுகி
யடுபுலிப்பொறி யமுக்குமால்

எள்ளியேறு நரையிவுளி மார்பிற
வெறிந்து குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கல்லிருப்பு
முளைதந்து வீசியுடல் சிந்துமால்
கொள்ளி வாயலகை வாய்திறந்து
கனல்கொப்புளிப்ப வுடல்குப்புறத்
துள்ளியாடுவன கைகள் கொட்டுவன
தோள்புடைப்ப சில கூளியே.

துவக்கு சங்கிலி யெறிந்திழுக்கு
மரிதொடர் பிடித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைகளைத் திருகி
யுடனெருக்கு மர நிலைகளாற்
கவைக்கொழுந் தழல்கொளுத்தி வீசுமெதிர்
கல்லுருட்டியடு மொல்லெனக்
குவைக்கடுங்கன் மழைபெய்யு மட்டமனல்
கொட்டு மேவலர்கள் கிட்டவே.

188947

உருக்கியீய மழைபெய்யு மாலய
வுருக்கு வட்டுருகு செம்பினீர்
பெருக்கி வீசும்விடு படையெலா
மெதிர்பிடித்து விட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீசுநடை கற்றமாடமொடு
சென்று துடி முரசொடும்
எருக்கி மீறு நடைவைய மேனடவி
யெய்யும் வாளிமழை பெய்யுமால்
வெறிகொளேம் பொறியை வெல்லினும்
பொருது வெல்லுதற் கரியகாலனை
முறியவெல்லினும் வெலற்கருங் கொடிய
முரணவாய மா ரரனெலாம்
அறிவினுனிறவு கம்மியன் செயவு
மரியலா யவனர் புரியுமிப்
பொறிகள் செய்யும் வினையின்ன'

என்பனவேயாம்.

'சினத்தயில் கொலைவாள் சிலைமழுத்தண்டு
சக்கரம் தோமர முலக்கை
கனத்திடை யுருமின் வெருவருங் கவண்கல்
என்றிவை கணிப்பில கொதுகின்
இனத்தையு முவணத் திறையையு மியங்குங்
காலையு மிதமல நினைவார்
மனத்தையு மெறியும் பெறியுள வென்றால்
மற்றினி யுணர்த்துவ தெவனோ ?

என்று கம்பநாட்டாழ்வார் ஓரே பாசுரத்தில் நயம் பல வமைய விக்கருத்துக்களை யமைத்துப் போந்தனர். ஏணியுஞ் சீப்பு மாற்றி, மாண்வினை யானையு மணி களைந் தனவே, என்ற புறநானூறும், சீப்புள்ளுறுத் துத் திண்ணமும்போக்கிக் காப்புள்ளுறுத்த கடிமதில் வாயில்' என்ற உதயணன் கதைத் தொடரும் ஈண் டைக்கு நோக்கத் தக்கனவாம்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்விடயமாகக் கூரியுள்ளதை ஈங்குக் கவனித்தல் பெரிதும் வேண்டுவ வதொன்றாகலான், அவர் குறித்த இடத்தையுங் குறிப்பிடுவாம்.

'முழுமுத லரணம் முற்றலுங் கோடலு
மனைநெறி மரபிற் றாகு மென்ப'

(தொல்காப்பியம் - புறத்திணையியல், சூ-65)

என்பது சூத்திரம்

(வேற்று வேந்தன் குலத்துக்கெல்லாம் எஞ்சாது முதலாய் வருகின்ற முழு அரணைச் சென்ற வேந்தன் வளைத்தலும், இருந்த வேந்தன் கைக்கொண்டு காத்த லுமாகிய இரண்டு வழியாகிய இலக்கணத்தை உடை த்து, அவ்வுழிஞைத்திணை என்று கூறுவர் புலவர் (என்பது, நச்சினார்க்கினியரது பதவுரையை யொட் டிய பொழிப்புரை.)

'முழு அரணாவது மலையுங் காடும் நீருமல்லாத அக நாட்டுட்செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டிமுள் முதலியன பதித்த காவற் காடு புறஞ்சூழ்ந் ததனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பிறவும் அமைந்து எழுவுஞ் சீப்பு முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற்கோபுரமும் பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம்.

இனி மலையரணும் நிலவரணுஞ் சென்று சூழ்ந்து நேர்தலில்லா ஆரதர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில்போல வடிச்சிலம்பின் அரணமைந்தனவும், மீதி ருந்து கணைசொரியும் இடமும் பிற எந்திரங்களும் அமைந்தனவும், அன்றிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன அமைந்தனவாம். இங்ஙனம் அடைத்திருத்தலும் அவனைச் சூழ்ந்தழித்தலும் கலி யூழிதோறும் பிறந்த சிறப்பில்லா அரசியலாதலின் இவை வஞ்சமுடைத் தாயிற்று.

சிறப்புடை அரசியலாவன, மடிந்தன உள்ளத்தோ னையும், மகப்பெறாதோனையும், மயிர்குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண்பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்த படையெடாதோனை யும் பிறவும் இத்தன்மையுடையோரையுங் கொல்லா து விடுதலுங் கூறிப் பொருதலும் முதலியனவாம். இனி ஆகுமென்றதனான், எதிர்சென்ற வேந்தன் பொருது தோற்றுச் சென்று அடைத்திருத்தலும் உழிஞையாம். மற்றை வேந்தன் வளையாது, மீளின் அவனடைத்தது உழிஞை யாகாதென்றுணர்க.'

என்ற நச்சினார்க்கினியரது விசேடவுரை மிகவும் பாராட்டற்பாலதாம்.

இத்தகைய இயந்திர விசேடங்களைக் கூரிய நுண் ணுணர்வுகொண்டமைத்த யவனதேயத்தாரது மதி நுட்பத்தையும், அவற்றையெல்லாம் முறைபிறழாது தத்தம் நூலில் வரைந்துரைத்துள்ள புலவர் பெருந் தகையாரது நுண்மாணுழைபுலத்தையும் எவ்வாறள விட்டுரைக்க வல்லேம் ? சங்கநூலின்பம் சதமகனு லக நலத்தினும் பன்மடங்கு விஞ்சியிருத்தல் புலவ ரது அனுபவசித்தமென்பது முற்றுந் தேற்றமேயாம்.

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வை பவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணாசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணா 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல். இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது:

விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—12. திருவடி சூட்டு படலம்.

[954-வது பக்கத் தொடர்ச்சி]

புலமையின் சிகர மேறப்
புதுப்பொருள் விளங்கும் மேன்மை.

சுடு சுரத்தினைத் தண்ணென் மருதமாமெனக் கட ந்துபோந்த பரதன் சேனை கிளப்பிய

தூளியின் படலையுந் துரகந் தேரொடு
மூளிருஞ் சினக்கரி முழங்கு மோதையு
மாளிருங் குழுவின ரார வாரமுங்
கோளிரும் படையிதென் றுணரக் கூறவே

[புழுதிப் படலமும், குதிரைகளும் தேர்களும் மூண்டெ ழும் மிகுந்த சினமுடைய யானைகளும் செய்த பெரு முழக் கமும், காலாட்படையினர் செய்த ஆரவாரமும், வலி யமைந்த பெரிய சேனை வருகின்றதென்பதை உணர்த்தவும்]

எழுந்தன னிளையவ னேறி னானிலங்
கொழுந்துயர்த் தனையதோர் நெடிய குன்றின்மேற்
செழுந்திரைப் பரவையைச் சிறுமை பேசிய
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான்

[இலக்குமணன் எழுந்து பூமியானது கொழுந்துவிட்டு வளர்ந்தது போன்ற ஓர் பெரிய குன்றின்மேல் ஏறி, செழு மையான அலைகளையுடைய கடலைச் சிறியதென்று சொல் லும்படி, கட்டமைந்த வில்லையுடைய இச் சேனைக்கடலைப் பார்த்தான்.]

குன்றினை நிலத்தின் கொழுந்தெனக் கூறிய திறம் சாலச் சிறந்தது. இளமையும் வளப்பமும் மாறாப் பசுமைவாய்ந்த மதிநலமுடையோர் கொழுந்தொன் றெதற்கும் கொடுக்க வல்லவராகின்றார்."கொழுந்தோ டிப் படர்கீர்த்தி" எனப் புகழையே கொழுந்துபோக் கிப் படர்த்தினவர்க்கு, நிமிர்ந்த குன்றினை நிலத்தின் கொழுந்தாக்கு மிது அரியதன்று. ஆயினும், சித்திர கூடப் பருப்பதத்தினின்று காரகிலொடு அந்தணர் ஆவுதிப்புகை அளாவி, "கரிய மால்வரைக் கொழுந் தெனப் படர்வன" வற்றைக் காணுங்கால், கொழுந்திற் கோர் கொழுந்து கூட்டியுரைக்கும் புலமையிற் கம்ப ரை நிகர்ப்பா ரிலர். அறம் செய்த அறமென்றும், தவம்செய்த தவமென்றும், முனிவே முனிந்ததென் றும், உடல் ஊடியதென்றும், தொழில்களே தத்த மைப்புரிந்துகொள்ளச்செய்தவர் கொழுந்துக்குக்கொ ழுந்தோட்டியது எளிதென்றே இயம்பல்வேண்டும்.

குன்றேறிக் குறிக்கொண்ட இலக்குவன், ஐயமோ சிறிதுமின்றி,

பரதனிப் படைகொடு பார்கொண் டாண்மறங்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தானிது
சாதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான்.

[பூமியைக் கைக்கொண்டு ஆளவேண்டு மென்னும் கொடுமையை எண்ணி உள்ளத்தில் கிடந்த கறுவுகின்ற பேராசையால் பரதன் இப்பெரிய படையைத் திரட்டிக் கொண்டு விரதம் பூண்டிருக்கின்ற இவ்விராமன்மேல் எழுந்துளன். இது நிச்சயம்;இப்பரதன் நோக்கம் வேறொன் றுமில்லை என்று எண்ணி மிகுகின்ற கோபமுடையவனாய்]

கீழே குதித்து இராமனை விரைவின் எய்தி, "உன்னை மதிக்காமற் பரதன் நின்மேற் பெரும்படை எழுந்து வந்துளன்" என்றனன். ஒன்றுமறியாப் பேதை இவ் விலக்குவன். அப்பேதைமையின் பெருமையே இச் செம்மலை நம் மிதயத்தில் நிலைக்கவைக்கின்றது. பரத னுடைய சேனையைக் கண்ணுற்ற குகன், "இராம னோடு உடற்றவே கோலாம் இப்படை எடுத்தது" என்று சிறுமளவில் வேறுமோர் காரணம் இருக்கலாம் என்னுமையமும் கலந்திருந்தது. பின்னரும் அவன் "இப்பரதன் குறிப்பெலாங் கண்டுணர்ந்து வருகின் றேன்" என்பதிலிருந்தும், தோன்றிய தோற்றமே தீர்ந்த செய்தியென்ற கொள்கையுடையவ னல்லன் குகன்என்பதுந் தெரிந்துகொள்ளலாம். இலக்குவனோ, "இதுசரதம், மற்றிலது" என ஒருநொடியில் துணிந்து விடுகின்றான். அறியாமையின் அடையாளங்களில் இத்தகைய துணிவுமொன்று. ஆற்றலின் குறைவினு லல்லாவிடினும், அன்பின் மிகுதியால் மதியை மறைக் கின்ற பேதைமைக்கு இலக்குவன் ஆளாகின்றான். தாடகைவனத்தைக் கண்ணுற்றபோது, "சிவபிரான் விழிபட வெந்ததோ, வேறுசா னுண்டோ" என்று காரணம் வினவிய இராமனும், இராமன் வனத்திற் குச் சென்றது, "தீங்கிழைத்ததனினோ, தெய்வஞ்சீறி யோ, ஓங்கிய விதியினோ, யாதினோ" எனத் தன் அன் னையை வினவிய பரதனும் உடன்பிறந்தவர்களாயி னும் அவர்போல் ஒன்றினை உசாவும் ஊற்றமில்லா அன்பன் இலக்குவனுக்கு யாவும், "சரதம், வேறி லது." தன் னின்னுயிர்த் தமயந்தி இரண்டாம் சுயம் வரம் இயற்றநின்றாள் என்னக் கேட்ட நளன்,

முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது

என இயன்றதற் கெல்லாம் இடந்தந்துரைத்தது அவன் இதயத்தின் தூய்மையோடு மதியின் நுட்பத் தையும் தோற்றுவிக்குந் தன்மைத்து.

இனி யென். இமைப்பொழுதிற் போர்க்கோலம் பூண்டு இராமனை யடிவணங்கி இலக்குவன் இன்ன ணம் வீரவாசகம் சில விளம்பலுற்றான் :—

இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னொரு பின்பு வந்தவென்
ஒருமையுங் கண்டினி யுவத்தி யுள்ளமே

[இம்மை மறுமை இரண்டின் பயனையும் இழந்த அப் பரதனது உயர்ந்த தோள்களின் பருமையையும், தயரத மன்னவன் பெற்றிருந்த சேனையின் மிகுதியையும், உன் பின்னே பிறந்து உன்னைத் தொடர்ந்துவந்த என் தனிஆற் றலையும் கண்டு இனி நீ மனம்மகிழ்வாய்]

படரெலாம் படப்படும் பரும யானையின்
திடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்தன குருதி யாறுகள்
கடரெலா மடுப்பன பலவுங் காண்டியால்

[பலவகைத் துன்பப்பட்டுச் சாகும் பெரிய யானைக ளாகிய மேடுகளை உருட்டிக்கொண்டும், தேர்களை இழுத் துக்கொண்டும், குடல்களை அலைத்துக் கொண்டும், கடல்

முழுதும் மண்டுகின்ற இரத்த ஆறுகள் பலவற்றை இப்பொழுது காண்பாய்.]

கருவியுங் கைகளுங் கவச மார்பமும்
உருவின வுயிரினோ டுதிரந் தோய்வில
திரிவன சுடர்க்கணை திசைக்கை யானைகள்
வெருவரச் செய்வன காண்டி வீரநீ

[தீச்சுடரும் என் அம்புகள், கேடகங்களையும் கைகளையும் கவசங்களையும் மார்பையும் உருவி, பகைவரின் உயிர்களைக் கவ்விக்கொண்டு, அதிவேகத்தினால் இரத்தமும் தோய்வதின்றித் திரிவனவாய், துதிக்கையுடைய திக்கஜங்களும் அஞ்சும்படி நான் போர்செய்வதை, வீரனே, நீ காண்பாய்]

கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை யலகை யற்றுகு
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடக நடிப்பன காண்டி நாதநீ

[தாவுகின்ற குதிரைகள் அழிந்த, விளைந்த தேர்களின் பொன்தட்டின்மேல் பேய்கள், அறுந்துவிழுந்த கேடகத்தை ஏந்திய பெரிய கைகளை எடுத்துக்கொண்டு தாளம் அடித்துக்கொண்டு பாட்டோடு கூத்தாடுவனவற்றை, நாதனே, நீ காண்பாய்]

பண்முதிர் களிற்றொடு பரதன் சேனையி
னெண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையின்
மண்முது காற்றவுங் காண்டி வள்ளனீ

[அலங்காரம் செய்யப்பெற்ற யானைகளையுடைய பரதன்சேனையின் தொகையை வேருடன் நான் இமைப்பொழுதில் அறுத்து ஒழித்தலால், இறந்து சேர்ந்தவர் பாரம் பொறுக்காமல் விண்ணுலகம் முதுகு நெளிக்கவும், கடலை ஆடையாக உடைய இப்பூமி முதுகை இளைப்பாறிக்கொள்ளவும், வள்ளலே, நீ காண்பாய்]

நிவந்தவான் குருதியி னீத்தநீந்திமெய்
சிவந்தசா தகரொடு சிறுகட் கூளியுங்
கவந்தமு முலகிின் கைய தாயதென்
றுவந்தன குனிப்பன காண்டி யும்பர்போல்

[பொங்கிய பெரிய இரத்தவெள்ளத்தில் நீந்தி உடல் சிவந்த பூதங்களோடு சிறிய கண்களையுடைய பேய்களும், தலையற்ற கவந்தங்களும், உலகமுழுவதும் உன்வசமாய் விட்டது என்று தேவர்களைப்போல் மகிழ்ந்து கூத்தாடுவனவற்றைக் காண்பாய்]

சூழிவெங் கடகரி துரக ராசிகள்
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
ஆழிவெங் குருதியா லலைந்து வேலைகள்
ஏழுமொன் றுகின் றிரைப்பக் காண்டியால்

[முகபடாமணிந்த கொடிய மதயானைகளும் குதிரைக் கூட்டங்களும் பெரிய வலிய தோள்களையுடைய போர் வீரர்களும் இறந்தொழிய, கடல்போன்ற வெப்பமுடைய இரத்தத்தால் கலக்கப்பெற்று, எழு கடல்களும் ஒன்று கூடி ஒலிப்பதைக் காண்பாய்]

ஆளற வலங்குதே ரழிய வாடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளறத் தலையறப் புரவி தாளொடுந்
தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டியால்

[போர்வீரர்கள் அழியவும், அசைகின்ற தேர்கள் அழியவும், போர்த்தலைவர்களது வாள்கள் துணிபடவும், கட்டமைந்த வில்கள் உடையவும், பெரிய யானைகளும் குதிரைகளும் கால்களுந் தலையும் தோளும் அறுபடவும், கூரிய அம்புகளை நான் தொடுக்கக் காண்பாய்]

தழைத்தவான் சிறையன தசையுங் கவ்வின
அழைத்தவான் பறவைக ளலங்கு பொன்வடிப்
பிழைத்தவான் பகழிபுக் கிருவர் மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போகக் காண்டியால்

[செழித்த பெரியஇறகுகளும், ஒளிஅசைகின்ற பொன் விளிம்பும் அமைந்த என் அம்புகள் பரதசத்துருக்கினர் மார்பில் தைத்துத் தசையைக் கவ்விக்கொண்டு ஆகாயத்திலுள்ள பறவைகளை விருந்துண்ண அழைத்தனவாய்த் துளைத்த துவாரத்தூடே போகக் காண்பாய்]

வையகந் துறந்துவந் தடவி வைகுத
லெய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல்கண் டுவந்தவ ணகையி னேக்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால்

[இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குப்போய் வசித்தல் உனக்கு நேர்ந்ததேயென்று உன்னைப் பெற்ற கோசலை வருந்துவதைக்கண்டு மனமகிழ்ந்தவளாய்ச் சிரிப்புடன் நோக்கிய கைகயன்மகள் விழுந்து இனி அலறுவதைப்பார்]

என்று போர்துவக்காமுன் பரணிபாடிய இலக்குவன் தான் இனி வழங்கிற்கும் சரங்களினும் மிக்க சுடுதொழிற் சொற்களை வழங்கி, "இவ்வனிகத்தை வடிக்கணை யொன்றில் வென்று திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளென்ன யான் பொலிவென்" என வஞ்சினங்கள் மொழியலுற்றான்.

இராமனோ யாவுங்கேட்டான். தன்னருமைத் தம்பியின் ஆற்றலோ அறிவோ அல்லது தன்பாலுள்ள அன்போ பெரிதென ஆயும் உள்ளத்தனாயமைந்திருப்பானாயினும், மக்கள்தம் மழலைச்சொற்களைக் கேட்டு மகிழுந் தந்தையென அவன் இதழ்களின் கடையை இளநகை களவுசெய் தாடியுமிருக்கலாம். அந்நகையினூடே தன்னினிய தம்பியை அருத்தியொடு சில சொல்லித் திருத்த நேர்ந்தனனாய்,

இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால்

[லக்ஷ்மணா, பதினான்கு உலகத்தையும் நீ கலக்க எண்ணினால் அதைத் தடுக்க இயலாதென்பதைக் கூறவும் வேண்டுமோ! (உன் ஆற்றல் அவ்வளவாயினும்) அறிவிற்கு ஏற்றதொன்றை நான் சொல்லக்கேள்]

என்ன இலக்குவனது அறிவினும் ஆற்றலே மிகுந்திருக்கின்றதென்பதைச் சொல்லாமற் சொல்லிக் காட்டி, "நம் குலத்தில் தருமம் பிறழ்ந்தவர் இதுகாறும் ஒருவரு மிலராக, இப் பரதன்மாத்திரம் இன்று மாறுபினான் என நீ எண்ணுவது ஏனப்பா" என மெல்லவே கழறுமளவில், தன் தம்பியின் அறிவின் குறைவினும் தன்பால் பூண்டுள அன்பின் மிகுதியே இவ்வழுவிற்கு அமைதியாமென,

எனைத்துள மறைபவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
யனைத்திற மல்லன வல்ல வன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினால்

[பனைமரம்போன்ற திரண்ட கைகளையுடைய யானைப் படையையுடைய பரதன் செய்கைகள் எவையோ அவைகள்தாம் செய்யத்தக்கனவென்று வேதங்கள் அத்தனையும்சொல்லலாகின்றன. அவன்செய்யாதவைகளெல்லாம் செய்யத் தகாதவைகளே. இதனை இலக்குமணா, நீ என்பால் வைத்துள நேயத்தினால் நினைக்காமற் போயினை]

என்னைப் பரிவினோடும் தேற்றி,

பெருமக னென்வயின் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை யென்வயிற்
றருமென நினைகையுந் தவிரத் தானையாற்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ

[என்னிடத்தில் சுரந்த அன்பினால் பெருந்தகையாகிய அப்பரதன் இங்கு வருகின்றான் என நினைப்பதையும், பூமியை என்னிடத்துக் கொடுப்பான் என நினைப்பதையும் தவிர்த்து, சைனியத்தால் என்னுடன் போர்செய்வான் என்று எண்ணுவது அறிவு ஆகுமா]

என்று மீண்டும் அறிவுறுத்தி,

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையி
னாணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியன் மொய்பினாய் போந்த நீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால்

[ஆபரணங்கள்போல் உனக்கு அழகுசெய்கின்ற வலிமையை உடையஇலக்குமணா, மிகச்சிறந்த தருமதேவதை போன்றவனும், நடுநிலைமை சாயாமல் நிலைநிறுத்தும் அச்சாணி போன்றவனுமாகிய பரதனைப்பற்றி நீ அவ்வாறு நினைக்கலாமோ; அவன் இங்கு வந்தது என்னைக் காணும் பொருட்டே. நான் சொல்வதன்றி நீ இதனை இனிக் கண்கூடாகப் பார்ப்பாய்]

என, இலக்குவன் தனக்குப் போர்க்களம்பாடிக்காட்டினவைகளுக்கு எதிராய்ப் பரதனது குண நலங்கள் கூறி அவன் கருத்தைக் காட்டுவானென இராமன் இயம்புவதன்முன், சேனையைப் பின்நிறுத்திப் பரதனும் தம்பியும் முந்தி யெய்தினர். இவ்வண்ணம் சிரமேற்குவித்த கைகளோடும், துவண்ட மேனியோடும், புலம்பிக் கரைகின்ற கண்களோடும், துன்பத்தின் தோற்றம் இதுவே என்று எழுதிக்காட்டிய சித்திரத்தை ஒத்து வருகின்ற பரதனை உற்று நோக்கி,

கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினான்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையநீ
தேர்ப்பெருந் தானையப் பரதன் சீறிய
போர்ப்பொருங் கோலத்தைப் பொருந்தநோக்கென

[கார்மேகம் போன்ற மேனியையுடைய இராமன், "ஆரவாரஞ் செய்கின்ற வில்லையேந்திய தம்பியே, நீ வையும்படி, தேர் முதலிய பெரும் சேனையோடு அப்பரதன் நம்மேற் கோபித்துவந்த பெரிய போர்க்கோலத்தை நன்றாகப் பார்" என்று காட்டினான்]

குறுநகையுடன் இராகவன் காட்டிய கோலத்தைக் கண்ணுறக் கண்டதும்,

எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழுஞ்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே

[இலக்குவன், போர் ஒடுங்கிய தோள்களையுடைய பரதனை முன் வைதுஎழுந்த சொற்களும் கோபமும் தன் உணர்வும் சோர்ந்தொழிய, கையிலிருந்த வில்லும் கண்களிலிருந்து நீரும்தரையில் விழவிட்டு, ஒளிமழுங்கியமுகத்தோடு நின்றனன்]

பரதன் வருகையிற் கம்பர் பெரும்பாலும் வான்மீகரைப் பின்பற்றியே வரைகின்றார். எனினும் முதனூலிலிருந்து கம்பர் எடுக்காமல் விட்டுவிட்ட வாசகங்கள் ஒன்றிரண்டு சிறப்பாகக் கருதத்தக்கன. பரதனுடைய சேனையைக்கண்டு இலக்குமணன் தான் யுத்த சன்னத்தனானதுமன்றி இராமனையும் வில்லேந்தி நிற்கும்படி அங்குச் சொன்னதை இங்கு மாற்றி, "ஒரு தனியே நான் பகையைப் பொருதழிக்கு மாற்றலைக் கண்டிரு" எனக்கூறவைத்தது பெரியதோர் மாற்றமன்று. எனினும், வந்தெய்திய பரதனைத் தழுவியணைத்தவுடன், சுகம் வினவலென்பதை வியாஜமாய் வைத்து இராமர் பரதனுக்கு, "அரச நீதியை" உபதேசம் செய்யும் அப் பெரிய பாகத்தைக் கம்பர் தம் கையில் தொடவுமில்லை. சத்துருபயத்தை முன்னிட்டுத் தற்காத்துக்கொள்கின்ற ஓர் அரசவாழ்க்கை நிகழ்த்துவதற்குரிய நீதிகள் அவை. யாரொடும் பகைகொள்ளா வாழ்க்கைக்கே வழிசெய் தமைக்கும் கம்பர் அவைகளைக் கண்ணெடுத்தும் பாரார். சார்பறத்தைச் சாதிக்க முயலும் அத்தனையும் அறவே கழித்து முதலறத்திலேயே நாட்டம் வைத்து முனைகின்ற இத் தமிழ்க் கவிஞர், இராமர் அங்குப் பெருக்கிய அறிவுரைகளத்தனையும் சிறுமானுடர் செய்தியேயெனச் சிந்தித்து அவைதாம் தன் நூலிற் படியாமல் துடைத்த பரிசு சாலவும் உவக்கத்தக்கதே. தான் அவைகளை ஏற்றுக் கொள்ளாமைக்குக் காரணம் இன்னதென்பதையும் கம்பர் விளக்க நினைத்தார்போல், பரதனும் இராமனும் தழுவியணைத்த தன்மையை,

அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருவுள முருகப் புல்லினான்
நியாயமத் தனைக்குமோர் நிலய மாயினான்
தயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே

[நீதிகளுக் கெல்லாம் இருப்பிடமாகியவன் தயை என்னும் முதலறத்தினைத் தழுவிக்கொண்டதுபோல், இராமன், பெருமூச்செறிந்து அழுகின்ற கண்ணீர்அருவி மார்பில் புரளப் பரதனைத் தன் மனமுருகப் புல்லினான்]

எனச் செப்புமிச் செம்மை தன்பால் சிந்தனை பெரிது அடக்கியுளது. தயையானது நீதியை அணைத்துக்கொள்வதுபோல் இராமபரதர்கள் தழுவினர் என்னுஞ் செவ்வியில் முதலறமென்பது தயையேயன்றி வேறன்று என்னும் இலக்கணத்தையும் கம்பர் இயம்பக் காண்கின்றோம். தயையுடன் கலக்காத நியாயம் மிகக் கொடியது. ஷேக்ஸ்பியர் மகாகவி,

But mercy is above the scepter'd sway,—
It is enthroned in the heart of Kings,
It is an attribute to God himself ;
And earthly power doth then show likest Gods'
When mercy seasons justice

என்றுசாற்றிய முறைமையில் கம்பருக்கே இணையாகப் புலமையின் சிகரத்தைச் சேர்கின்றார் என்னல் வேண்டும். புலமையின் சிகரத்தில் சேர்ந்து நிற்பார் கண்களுக்கு உண்மையின் திறம் ஒருபடித்தாய்த் தோன்றும். இங்கு ஷேக்ஸ்பியரும் கம்பரும் ஒருவருக்கொருவர் பொருளுரை செய்துதவுகின்ற சீர்மையைக் காணலாம். இச்செய்யுளின் ஈற்றடிக்குத் 'தயையுடைய முதற் கடவுள் அறத்தினைத் தழுவிய' தென்னும்உரைக்கு உடன்படாமல், நியாயமானது தயையென்னும் முதலறத்தினைத் தழுவியதென்னும் சிறப்புரையை, ஷேக்ஸ்பியரின் 'Mercy seas-ons Justice' என்னும் தொடர் தோற்றுவிக்கின்றது. அவ்வாறே, இங்குத் தழுவியது இராமபிரான் எம்மையாளுடைய கடவுளே என்பதைக் கருத்தினில் வைத்து நோக்[illegible] 'And earthly power doth then show likest Gods' என்னும் [illegible]பியர் மொழி கள் புதுச்சிறப் பொன்று பெற்றதாகும்.

18947

களவியற் காரிகை

[946-வது பக்கத் தொடர்ச்சி]

51. உற்ற நெறிகை யடைசுரத் துய்த்தல் சுரத்துழை
பற்றி விருந்து விலக்கல் பதியி னளவுரைத்தல் [யோர்
சிற்றிடைத் தோழிதன் னைவினு விச்செவி லியிரங்க [பே
னற்றநு வேயனை யாண்மென்மை கூறனற் றாய்க்குரைப்
52. நற்றா யிரங்கனற் செஞ்சுடர் தன்னைப் பரவனண்ணிப்
பெற்றாள் கருமா மகளுக் குரைத்தல்பின் சேறல்சுரத்
துற்ற லிரங்கல் புறவோ டுரைத்த லடிச்சுவட்டைச்
சுற்ற லுரைத்தல் சுரத்து வினாதல் துடியிடையே.
53. துடியா ரிடையாட்கை யங்கிளைத் தல்சேர் விடஞ்
[சொல்லுதல்
தொடியார் செவிலியை யாற்றல் துடரகந் தானணித்தல்
வடியார் வரவது முந்துறப் பேய்ந்த கிளைமகிழ்ச்சி
யடியான வேலன் றனைவினு வின்றாட் புகழ்வதுவே.
54. வேட்டான் மணங்கண் டுரைத்தலக் கற்பு நிலைவிளம்
[பல்
வாட்டாழ் விழிதன் மகணிலை கூற லெனவதுத்த
பாட்டார் கிளவி ... ...
... ...

[உடணிலைச் செலவு ...]

[கிளவியாமென்ப தறிவித்தலைக் கருதிற்று. என்னை? கையடையும், சுரத்துய்த்தலும், விருந்து விலக்கலும், பதியள வுரைத்தலும், தோழியை வினுதலும், செவிலி யிரங்கலும், மென்மை கூறலும், [நற்றாய்க் குரைத்தலும்,] நற்றாயிரங்கலும், செஞ்சுடர்ப் பரவலும், கருமகட்குரைத்தலும், பின்செல வலித்தலும், சுரத்திரங்கலும், புறவொடுரைத்தலும், அடிச்சுவடுரைத்தலும், சுரத்திறம் வினுதலும், ஐயமுரைத்தலும், சேர்விடமுரைத்தலும், செவிலியை யாற்றலும், துடரகந்தணித்தலும், வரவுமுந்துறுத்தலும், கிளையது மகிழ்ச்சியும், வேலனை வினுதலும், ஈன்றாட் புகழ்தலும், மணங்கண்டுரைத்தலும், கற்புநிலை விளம்பலும், மகணிலைகூறலும் என. அவற்றுட் கையடை யென்பது உடன்போக விரைந்தபின்றைத் தலைமகளைக் காட்டிக் கொடுத்துத் தோழி தலைமகனுக்கு ஓம்படை சொல்லுதல். அதற்குச் செய்யுள் :—

பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லையன் ஞடிறத் துச்சிலம்பா
வறந்திரி தந்துன் னருளும் வறிதாய் வருமறையின்
றிறந்தெரிந் தார்கலி யும்முற்றும்வற் றுமிச் சேணிலத்தே.
—திருக்கோவை-213.

மென்முலை வீழினுங் கூந்த னரைப்பினும் விண்ணுரிஞ்சு
நன்மலை நாட விகழல்கண் டாய்நறை யாற்றுவென்ற
வின்மலைதானைநெடுந்தேர் விசாரி[தன்]வேந்தர்பெம்மான்
[கொன்மலி வேனெடுங் கண்ணிணைப் பேதைக் கொடியி
[னையே.
—பாண்டிக்கோவை.

சுரத்துய்த்த லென்பது... ...
[அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல் காண்டோறும் வண்ட] றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே.
—நற்றிணை-9.

மெல்ல மெல்லநின் னல்லடி யாற்றி
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
யிருந்தண் பொழிலயாஞ் செல்லு மாறே.
—பொருளியல்.

அன்ன நடைமடவா யாற்றி யமைவரர்
சொன்ன வரிய சுரங்கடந்தோ—முன்னமரர்
தங்களூர் போலத் தனியே வடகொங்கிற்
றிங்களூர் தோன்றுஞ் சிறந்து.
—கிளவித்தெளிவு.

விருந்துவிலக்கு என்பது புணர்ந்துடன் போக்கின் கண் இடைச்சுரத்துக் கண்டார் தலைமகனை விலக்குதல். அதற்குச் செய்யுள்:—

விடலையுற் றாரில்லை வெம்முனை வேடர் தமியைமென்பூ
மடலையுற் றார்குழல் வாடினள் மன்னுஞ்சிற் றம்பலவற்
கடலையுற் றாரி னெறிப்பொழிற் றாங்கருக் கன்சுருக்கிக்
கடலையுற் றான்கடப் பாரில்லை யின்றிக் கடுஞ்சுரமே.
—திருக்கோவை-218.

அலைமன்னு பைங்கழற் செங்கோ
லரிகே சரியணியா
ரிலைமன்னு முத்தக் கொடியுடை
யானிகல் வேந்தரைப்போல்
மலைமன்னும் வெய்யோன் மறைந்தனன்
மாதரும் வாடினைந்தாள்
சிலைமன்னு தோளண்ணல் சேந்தனை
செல்லெஞ் சிறுகுடிக்கே.
—பாண்டிக்கோவை.

எம்மூ ரல்ல தூர்நணி யில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
யரிய சேய பெருங்கல் லாறே.
—சிற்றெட்டகம்.

நல்லோண் மெல்லடி நடையு மாற்றல
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
அணித்தாய்த் தோன்றுவ தெம்மூர்
மணித்தார் மார்ப சேந்தனை சென்மே.
—பொருளியல்

செங்கதிர்ச் செல்வனு மத்தஞ் சேர்ந்தனன்
கொங்கிவர் கோதையோ டிவ்வழித்
தங்கினை சென்மே தகைவெய் யோனே.
—இதுவுமது.

எங்களூ ரிவ்வூ ரிதுவொழிந்தால் வில்வேடர்
தங்களூர் வேறில்லை தாமூமூர்—திங்களூர்
நானு மொருதுணையா நாளைப்போ கு[? து]ம்மிந்த
மானும் நடைமெலிந்தாள் வந்து.
—கிளவித்தெளிவு.

வெஞ்சுரமும் போக்கரிது வெய்யோன் மலைமறைந்தான்
குஞ்சரங்க ணின்றதிருங் குன்றமது—பஞ்சநெதி
வங்கியே யன்ன மடமாது நீருமினித்
தங்கியே போகை தரம்.
—பழம்பாட்டு.

நாளை வரகுணர்கோ ளுங்கையிலே தங்கலாம்
மீளு மமரும் விடிந்துபோ—நீளமுமோ
ரம்பிட் டெயுந்தூர மிவ்வூ ரயில்வேல
கொம்புக்குங் காலாற[க்]கொண்டு
—பழம்பாட்டு.

பதியளவுரைத்த லென்பது இவ்வகை சொல்லி விருந்து விலக்கிய இடைச்சுரத்தார் தலைமக னூ[ர]ளவு சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

மின்றங் கிடையொடு நீவியன் றில்லைச்சிற் றம்பலவர் [லந்
குன்றங் கடந்துசென் றானின்று தோன்றுங் குரூஉக்கம
துன்றுங் கிடங்குந் துறைதுறை வள்ளை வெள்ளைநகையார்
சென்றங் கடைதட மும்புடை சூழ்தரு சேணகரே.
—திருக்கோவை-221.

நீயு மிவளுமின் றேகின்று சேர்திர்நெல் வேலியொன்னார்
தேயும் படிசெற்ற தென்னவன்[றென்]புன னாட்டினை
[யோர்
வாயு முகமு மலர்ந்த கமல மணி[த்தடத்துப்]
பாயுங் கயலவர் கண்போற் பிறழும் பழனங்களே.
—பாண்டிக்கோவை.

வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்கு
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந் தாங்கத் தியவனர்க
ளல்லா வெனவந்து சத்தியுநதாரவகைதொழு(கு)ஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே.
—பல்சந்தமாலை.

* * *

தோழியை வினுதலென்பது தலைமகளை யாடிடத்துக் காணுத செவிலித்தாய் வருந்திச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் :—

மயிலெனப் பேர்ந்திள வல்லியி னெல்கிமென் மான்விழி
[த்துக்
குயிலெனப் [பேசுமெங் குட்டனெங் குற்றதென் னெஞ்
[சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் றில்லைப்பல் பூங்குழலா
யயிலெனப் பேருங்கண் ணாயென்கொ லாமின் றயர்கின்
[றதே.]
—திருக்கோவை - 224.

* * *

பிரதி இதனோடு முடிகின்றது.

மதிப்புரை.

சசிவன்ன போதம்

[தருக்க வேதாந்த போதகாசிரியர்-காஞ்சிநகர்
ஆ. செங்கல்வராய முதலியார் இயற்றிய தத்துவப்
பிரகாசிகை என்னும் நூல் உரையுடன்
விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம் :—ஆ. செங்கல்வராய முதலியார்,
தமிழ்ப் பண்டிதர், ஹைஸ்கூல், குடியாத்தம்.

பழிக்கஞ்சாத நெஞ்சுபடைத்த பார்ப்பனன் ஒருவன் பழிச் செயல்களையே செய்து திரிந்து, தொழுநோயால் திங்களைப்போல உடலம் வெளுக்கவே சசிவன்னன் என்றபெயர் பெற்றவன். பின்னர்ப் பழமலையில் வீற்றிருந்த மஹாநந்த பராயணர் என்ற பெரியாரது கடைக்கண்ணோக்கத்தாலே, உடலினேயும் உள்ளத்தினேயும் உயிரினேயும் நீங்கி உயர்ந்த மெய்யுணர்வு பெற்று வீடு சேர்ந்தான்.

இந்த வரலாறு சூதசங்கிதையில் காணக்கிடக்கின்றது. விருத்தாசல புராணத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் இவ்வரலாற்றை எடுத்துக் கூறிப் பழமலையின் பெருமையினைப் புகழ்கின்றார். தத்துவராயர் தமது மோகவதைப் பரணியில் இதனை ஒரு கிளைக்கதையாக வைத்துப் பாடுகின்றார். இப்பெரியார் சூதசங்கிதையில் ஒரு பகுதியைப் பிரமகீதை என மொழிபெயர்த்தபோது இவ்வரலாறு அவரது உள்ளத்தைக் கவர்ந்ததுபோலும். இப் பெரியார் பாடிய நூல்கள் எல்லாம் தமது குருவாகிய சொரூபாநந்தரைப் போற்றும் புகழ்நூல்களேயாகும். அவற்றின்கின் றும் "புணர்ந்தபாவமெலாம் பரிபூரண முணர்ந்தான், விழிபட ஓடுமே" என்றுகூறுவதனின்றும், இப்பெரியார் தமது குருவினிடத்துக் கொண்ட மனப்பான்மை நன்குபுலனுகும். அத்தகைய மனப்பான்மைகொண்ட பெரியார் மனத்திற்குச் சூதசங்கிதையில்வரும் சசிவன்னன்வரலாறு மிகப்பிடித்தமாக இருந்திருத்தல் வேண்டும். அதுபற்றியே அதனை ஒரு கிளைக்கதையாகக்கொண்டு புனைந்துரைக்கின்றார்.

தத்துவராயர் சசிவன்னன் மாநந்தபராயணரது கடைக்கண் ணோக்கத் திருவமுதோடு நிறைமொழி மாந்தாது மறைமொழித் தேனையும் பருகினன் என்றே தமது வரலாற்றில் கூறுகின்றார். மெய்யுணர்வு எழுதற்பொருட்டு இன்றியமையாது அறியவேண்டிய மறைமுடிவை யாவர்மனமுங் கொள்ளுமாறு எங்ஙனம் விளங்கவைப்பது? இந்த நோக்கமொன்றையே கொண்ட தத்துவராயர் இந்நூலில் தாம் கண்டுபிடித்த முறையை மாநந்தபராயணர் வாயிலாகச் சசிவன்னனுக்கு வெளியிடுவதுபோல உலகினர்க்கு வெளியிடுகிறார். ஈதே இந்நூலின் தனிச்சிறப்பியல்பாகும். மறைமுடிவை உணரமுயல்வார் அனைவரும் இந்நூலை நமது தமிழ்நாட்டில் மிகவிரும்பிப் பயில்கின்றனர். மோகவதைப் பரணியைப் பலர் அறியார்; ஆனால் சசிவன்ன போதத்தை அறியாதார் சிலரே. இவர் கூறிவரும் சசிவன்னன் வரலாற்றின் சிறப்பியல்பை நோக்கி இதனைப் பெரியோர்பலரும் சசிவன்னபோதம் என்று வழங்கிவருவாராயினர்.

தத்துவராயரது தமிழ்ச்சுவையை உண்டுணர்ந்து மகிழாது பேசுவதால் பயன் என்ன? அச்சுவையை உண்டு களிக்கும்போது அருகிருந்து அச்சுவைகளின் பேரைச் சொல்ல ஒருவர் வேண்டாமா? அத்தகைய அருந்துணையாகத் திருவாளர் செங்கல்வாய முதலியாரது தத்துவப் பிரகாசிகை என்ற உரைநூல் பெரிதும் பயன்படும். சில நூற்றாண்டுகளுக்குமுன் எழுந்த இந்த நூலில் பல அருஞ்சொற்றொடர்கள் உள்ளன. ஆதலின் அவற்றை இனிது விளக்க இக்காலத்து ஒருவர்வேண்டும் அன்றோ. பிறவியைப் பெருங் கடலாகப் புனைந்துரைத்து அதனைச் சிறப்புருவமாகவும் முற்றுருவாகவும் தொடர்ந்துவரப் புனைந்துரைக்கின்றபோது, அவ்வொப்புமைகளை எடுத்துக்காட்ட ஒருவர் வேண்டும் அன்றோ? அகந்தையை ஆமைஎனப் புனைந்துரைத்தால், திகைத்தே நிற்போம். "ஆமை எதனாலும் பேதிக்க முடியாததுபோல் அகந்தையும் ஞானந்தவிர மற்றெதனாலும் பேதிக்க முடியாமையின் அளவிலகந்தையாமை, எனக் கூறினார்" என்று முதலியாரவர்களைப் போன்றார் விளக்கிவைத்தாலன்றோ அவ்வுருவகத்தின் நயத்தை நாம் பாராட்டுதல் கூடும். ஆமையோட்டை எடுக்க வேண்டுமானால் ஆமையை வெந்நீரில் இட்டு வேகவைத்தல் வேண்டும். ஆமை பிறந்தாலன்றோ ஆமையோடு வேறு பிரியும். உயிர்போனால் அன்றோ அகந்தை போவது. "இதுபற்றி அகந்தை யாமை என்

கிறார் தத்துவராயர்". "இத்தகைய பிறவிக்கடலைக் கடப்பது எங்ஙனம்" என்று வினவிய சசிவன்னனுக்கு,

"தன்னை யறிவ தறிவாம் அஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகும்மே"

என்ற திருமந்திரப் பொருளைப் பின்பற்றித் தன்னை யறியும் அறிவாம் மறைமுடிபை உணர்த்தத் தொடங்கி மாநந்தபராயணர் மற்றைய அறிவெல்லாம் பிதற்றென்று விலக்குகின்றார். தம்மை யறியும் அறிவதே யறிவு, என்றபோது தான் என்பதற்குப் பொருள்யாது என்ற ஆராய்ச்சி எழுகின்றது. தான் என்று உடல் உயிர் முதலானவற்றையே பேசி வருகின்றோம். அவற்றை விலக்கத் தேருவமையும், கடகுஞ்சர வுவமையும், நிழற்பாவை கண்ணடியிற்பாவை யுவமையும், பறவைக் கூடு உவமையும், கதிரவ னெதிர்நிற்கும் கண்ணின் உவமையும், மன்னன் சேனை யுவமையும், கூறி விளக்குகின்றார். இவற்றை விளக்கவும் ஒருவர் வேண்டாமா. தான் என்பது உயிர்க்குயிராய் நிற்கும் கடவுளே என்று கூறியவுடன், "நாமாவது கடவுளாவது?" என்று எவரும் வினவுவர். நாம் என்பதற்கு அவர்கள் கொள்ளும் பொருள் வேறு? "நான் கடவுள்" என்று கூறுவோர் கொள்ளும் பொருள் வேறு; விட்ட லக்கணை விடாத லக்கணை, விட்டுவிடாத லக்கணை என்றவற்றை விளக்கிவைத்து விட்டுவிடாத லக்கணையால் இப் பொருள்வேற்றுமையைப் பசுமரத்தாணி போல நமது மனதில் பதியுமாறு புனைந்துரைக்கின்றார். ஆகுபெயரின் இயல்பை வெளியிட இலக்கணம் அறிந்த முதலியாரைப் போன்றவர் உதவி வேண்டாமா?

முரண்ட சீவபரங் கடம்முடன்
முக்கியப் பொருளாவதே
இரண்டில் வேற்று சிற்சொரூப
மிலக்கியப் பொருளாவதே

என்று முடிப்பதின் பொருளை உண்மை ஆராய்ச்சி வழியான் எடுத்துக்காட்ட எண்நூல் உணர்வும் உண்மைநூல் உணர்வும் வேண்டும் அன்றோ. இவ்வறிவிற் பெரிய திருவாளர் முதலியார் இதற்கு உரைகாணத் தக்கவரேயாம்.

குருவானவர் மறைமொழியின் உண்மைப் பொருளை உணர்த்தியபின்னர், சசிவன்னன் உண்மை நிலையில் நின்றருளித் தனது துய்த்துணர்வை வெளியிடுகின்றான். விழிப்புநிலை கனவுநிலை, உறக்கநிலை, கடந்தநிலை என்ற நான்கு நிலைகளைப் பற்றிக் கேள்வி யுறுதவர் யார். யான் எனது என்று உலகில் வாழும்போது உயிர்கள் இந்த நான்கு நிலைகளில் உழல்வதுபோல, உலகைப் படைத்த முதல்வனும் விழிப்புநிலை முதலியனவற்றிற் புகுந்துலவுகின்றான். எல்லாவற்றையும் கடந்து நிற்கிற கடவுள் நிலையாம் சிவநிலையிலும் இந்நான்கு நிலைகளாம் வேற்றுமைகள் உள்ளன. அங்கு முடிவாகக் காணப்படும் கடவுளின் கடந்தநிலையே உண்மைநிலை என முடிக்கின்றார். மெய்யுணர்வு பெற்றவர்க்கல்லது இவ்வேற்றுமை புலனாகாது. அம் மெய்யுணர்வுநிலை எழுத்தால் எழுதிக் காட்ட ஒண்ணாதாகலின் குருவையே அடுத்து வழிபட்டு உணர்தல் வேண்டும். தத்துவராயர் விளக்கி வைத்தற்குமேல் வேறெவரும் சொல்களைக் கொண்டு இன்றை விளக்க முடியாது, ஆதலின் அவற்றைப்பற்றி முதலியார் அவர்கள் விரிவாகக் கூறவில்லை என்று குறைகூறிப் பயன் இல்லை.

முதலியார் அவர்கள் இந்நூலை எவ்வளவு விளக்க வேண்டுமோ அவ்வளவும் விளக்கியுள்ளார். அதன் சுவைகளையும் நயங்களையும் உள்நோக்கத்தையும், நூற்போக்கையும் எடுத்துக்காட்டி விளக்கி இருப்பாரானால் இந் நூல் இப்போதிருப்பதினும் பெரும்பயனுடையதாம். நம்முடைய அவாவிற்குத்தான் அளவில்லையே. அதனை முதலியாரிடம் வெளியிட்டேனும் ஆறுதல் அடைவோமே! பொருளுக்குத்தான் கருப்பானால் சொல்லுக்குமா கருப்பு. சொல்லித்தான் தீர்வோமே.

இப்பெரியார் இயற்றிய உரையில் புதியனவாகக் காணப்படும் சிலவற்றை எடுத்துக்காட்டாமல் இம் மதிப்புரையைமுடித்தலாகாது. இந்நூலின் மூன்றாவது பாட்டில் "அது கேளு முன்னை இதிகாசமொன்று சொல்லவே" எனவருகின்ற இடத்து "அது கேளும்" என்ற பிரித்துப் பழைய உரையாளர்கள் பொருள் கூறியுள்ளார்கள். முதலியார் அவர்கள், "அது கேளு" என்று ஒருமையாக வைத்தே பொருள் கூறுகின்றார். இப்பாட்டுக் காளியின் கூற்று. ஒரு பேய் கேட்ட கேள்விக்குக் காளிகூறும் விடையில் அப்பேய் ஒன்றை மட்டும் காளி விளித்துக் கூறுவாளேயன்றி மற்றவைகளையும் விளித்துக் கூறாள் என்பது முதலியார் அவர்களது கருத்து. முதலியார் கருத்துப் பொருத்தமுடையதேனும் பண்டையோர் கருத்தும் பொருத்தமுடையதேயாம். ஒரு வகுப்பில் சிறுவன் ஒருவன் ஐயம் வினவியபோது, ஆசிரியர் அவ்வையத்தை, வகுப்பிலுள்ளாரனைவரையும் நோக்கி விளக்கிவைத்தலை ஆசிரியராம் முதலியார் அவர்களே நன்குணர்வர்.

சசிவன்னனின் குருவின் பெயர் பழைய பதிப்புக்களில் மாநந்திபராயணர் என்றே காணப்படுகிறது. ஆனால் சூதசங்கிதையிலோ மஹாநந்த பாராயணர் என்றுள்ளது. மஹாநந்தபராயணர் என்பதற்குப் பொருள் விளங்குவதுபோல மாநந்திபராயணர் என்பதற்குப் பொருள் விளங்கவில்லை. ஆதலின் தமதுபதிப்பில் முதலியார் அவர்கள் "மஹாநந்தபராயணர்" என்றே பதிப்பித்துள்ளார். ஈதும் பொருத்தமுடையதேயாம். ஆனால் மாநந்திபராயணர் என்றே அப்பெயர் மருவி வழங்கிவருகையில், வழக்கத்திற்கு மாறாகத் திருத்தித் தன்கல்வியினுழத்தைக் காட்டுகின்றார் என்று சிலர் எண்ணுதல் கூடும்.

இந்நூலின் 106வது செய்யுள்

என்று பலகால் விழுமெழுந் தொழுமழும்புரியு
மென்னை யினியா
னின்று பலவாக வுரைசெய்த வவனன்பினொடு
நெஞ்சுருகியே.

என்று வழங்கி வருகிறது. இப்பாடத்தில் பொருள் முடிவு நன்கு விளங்கவில்லை. தொழு மழும் புரியும் என்ற விடத்தில் தொழுமழும் புரிவ(து) என்ற பாடம் காணப்பட்டதாக முதலியார் கூறி அப்பாடத்தையே பொருத்தமெனக் கொள்கின்றனர். அவ்வாறு பாடங் கொண்டால் பொருண்முடிபு எளிதில் விளங்குகிறது. இதனையும் இதுபோன்ற அரிய விடயங்கள் மற்றுஞ் சிலவற்றையும் வெளிப்படுத்திய முதலியாருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது.

T. P. M.

வர்த்தமானம்

சென்றவாரம் கூடிய சென்னைக் கார்ப்பொரேஷன் கூட்டத்தில், கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு நூல் நூற்கச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றும், பெரிய வகுப்புகளில் படிக்கும்பிள்ளைகளுக்கு ஹிந்தி கற்பிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. தினந்தோறும் ரேடியோ மூலம் ஜனநன்மைக்காக உலக வர்த்தமானங்கள் அறிவிக்கப்படவேண்டும் என்ற மற்றொரு தீர்மானமும் செய்யப்பட்டது.

***

காந்தியடிகள் இங்கிலாந்திலிருந்து பிரான்ஸிற்குப் பிரயாணமானபோது ராய்டர் நிருபரிடம் கூறியதாவது:-

நான் சீக்கிரத்தில் இந்தியா போய்ச் சேருவேன். ஆங்கில நண்பர்களை விட்டுப் பிரிந்துபோவதற்கு நான்மிகவும் வருந்துகிறேன் எனக்குஆங்கிலேயர்மீது துவேஷம் கிடையாது. ஆங்கிலேயருடன் இனி நான் போராட நேருமாயின் துவேஷத்தினால் அப்படிச் செய்வதாக நினைத்துக்கொள்ளவேண்டா. எனது நெருங்கிய பந்துக்களிடத்திலும் எனது நியாயமான கொள்கையை நிறைவேற்றும்பொருட்டுப் போராடியுள்ளேன் என்பதை எனது ஆங்கில நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தேசியச் சுயமரியாதைக்குப் பாதகம்நேராத விஷயங்களில் எல்லாம் நான் பிரிட்டிஷாருடன் ஒத்துழைப்பேன். வங்காளத்தில் அமுலில் இருக்கும் அவசரச்சட்டம் என்னை அஞ்சச் செய்கின்றது. இரு நாட்டாருக்கும் நட்பு வளரவேண்டுமெனின் இச்சட்டம் ரத்தாக வேண்டும். நட்பு முறையை நான் விரும்புகிறேன். நட்பு வளரும்படி ஆங்கிலேயர் அனுதாபத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.

***

பிரதம மந்திரியின் அறிக்கை:— 1931 வருடம், டிசம்பர் மாதம் 1தேதி வட்டமேஜை மஹாநாடு கடைசியாகக் கூடியது. அக்கூட்டத்தில் ராம்ஸே மாக்டொனல்டு, வருங்கால இந்திய அரசியல் விஷயமாய் விடுத்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:—

இந்திய அரசாங்க நிர்வாக விஷயமான பொறுப்பு மத்திய சட்டசபையினிடமும், மாகாணச் சட்டசபைகளினிடமும் ஒப்படைத்துவிடும் நோக்கத்தையே பிரிட்டிஷார் கொண்டுள்ளார். மாகாணப் பொறுப்பாட்சியைப் பற்றியும், மத்திய சட்டசபைக்கு அளிக்கப்படும் அதிகாரத்தைப்பற்றியும் அரசியல் திருத்தக் காரியக் கமிட்டியால் இந்தியருடன் கலந்து நிர்ணயிக்கப்படும். மாகாணங்களைப் பற்றியவரை முழுப் பொறுப்பாட்சி யளிக்கப்படும். பொறுப்பாட்சி விஷயமான திட்டம் காரியக்கமிட்டியால் போடப்படவேண்டும்.

ஆனால் இராஜப்பிரதிநிதியின் பொறுப்பினிற்கு ஏற்றபடி அவருக்குச் சில விசேஷ அதிகாரம் இருக்கவேண்டும் சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்கவும், நாட்டில் அமைதிநிலைக்கு இடரொன்றும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காகவும் இராஜப்பிரதிநிதிக்குப் பிரத்தியேக அதிகாரம் இருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அபிப்பிராயப்படுகின்றனர்.

வகுப்புவாரிப் பிரச்னைகளை இந்துக்களும் முகமதியர்களும் மற்றுள சிறுபான்மையரான வகுப்பாரும் ஒன்றுசேர்ந்து திருப்திகரமான முடிவைச் செய்து கொள்ள வேண்டும். அந்த முடிவைக் கார்யக்கமிட்டியார் ஏற்று, பொறுப்பாட்சித் திட்டத்தைச் செய்வார்கள்.

எல்லைப்புறம் தனிமாகாணமாக்கப்படும். அம்மாஹாணம் ஒரு கவர்னரின் தலைமையில் இருக்கும். ஆனால் எல்லைப்புறத்து ஜனங்களின் நிலைமையை உத்தேசித்து, அம்மாகாணத்தின் கவர்னருக்குமாத்திரம் சில விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

ஸிந்துவைத் தனிமாகாண மாக்கவேண்டுமென்பது இந்தியர் அபிப்பிராயம். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதற்கு விரோதமாக இருக்க விரும்பவில்லை. ஸிந்துவின் செல்வ நிலையைப் பரிசோதித்து, அது தனி மாகாணமாவதற்குரிய செல்வநிலை யுடையதாயின் அது மாகாணமாக வகுக்கப்படும்.

பிடரல் முறையே பிரிட்டிஷார் நோக்கம்; எனினும் இம்முறையை நிர்ணயிப்பதில் சுதேச மன்னருக்குத் திருப்தி ஏற்படும் வழியில் ஒரு முடிவு செய்யப்படவேண்டும்.

இப்பொழுது அளித்துள்ள ஓட்டுரிமை இன்னும் சிறிது விரிய வேண்டுமென்பது உண்மையே. அன்னதற்குக் கார்யக்கமிட்டியார் ஆய்ந்து ஒரு முடிவைச் செய்வார்கள். ஓட்டுரிமை விரிவடையும். இதுவே எனது முடிவான அறிக்கை. மஹாநாடு இன்றுடன் முடிவுறுகின்றது. இதுவரை நமது யோசனையில் பல இடையூறுகள் ஏற்பட்டன. எனினும் கடைசியில் ஒரு சமரசம் ஏற்பட்டது. இனி நாம் சிநேக முறையில் திட்டத்தைச் செய்யவேண்டும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

பிராஞ்ச:
மதுரை.
காஞ்சீபுரம்

KALANILAYAM.
REG. N.O, M 2324.

—: வைத்திய ரத்ன :—
பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதருஸ்.
கேட்லாக் இனும்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறுதல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.
ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.
பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.
குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி
மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00
திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.
ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.
T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

8894

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)
சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.
விலை அணா 12. வி. பி. செலவு வேறு.
கலாநிலயம், புரசை, சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்
காம சாஸ்திரம்
என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. F. Kumariah, B.A., B.L., (Editor)